[illegible]

v 6 No. 27 13 July 1983

3L

ஶ211, N128 KN

N33.6.27

189151

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

JAN 1934

Vol 6.] 1933 ஞூ ஜூலை மீ 13உ [No. 27

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 517
2. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்) T. N. சேஷாசலம் B.A.B.L. 519
3. கலித்தொகை (பாலைக்கலி, 16) T. A. கனகசபாபதி முதலியார் 522
4. காற்றுமழை (அங்கம் 2. களம் 1.) Shakespeare's Tempest 523
5. யாப்பிலக்கணம் (விருத்தப்) வித்துவான் M. V. வேணுகோபாலப் பிள்ளை 526
6. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 4-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 527
7. தமிழ்ப் பாடம் அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை 528
8. பொதிகை நிகண்டு (பகரவர்க்கம்) S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. 530
9. மலர்வனம்—"இன்னாதது மினிதாமே" மதுரகம் 531
10. வர்த்தமானம் 532

கலாநிலயம்

தன்னலமே பிறன் கேடு.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க" என்றார் நம் வாய்மையிற் பெரிய வள்ளுவர். சொல்லளவில் யாரும் மறுக்காத முதுமொழிகளில் ஒன்று இதுஎன்பதில்ஐயமில்லை. எனினும் இதனையே, 'மறந்தும் நின் ஆக்கம் நாடற்க' என்று மறுதிறத்தை மனத்திற்கொண்டு கூறினால், உலகமக்கள் மிக மிக வியந்து, "என்னிது, அசட்டுவார்த்தை யாரே இங்ஙணம் இயம்புவார்" எனப் பரிகசம்பேசி இளிவரச் சிரிப்பதற்கும் ஐயமில்லை. எனினும் இவை இரண்டும் ஒரு கருத்தினுள் உறவுகொண்டு வளர்கின்ற உண்மையின் இருமுகங்களே ஆகுந்தன்மையைத் தெளிதல் வேண்டும். தெளிந்தபின் அதற்கிணங்க வாழ்தலும் இயலலாம்.

அறிவு உணர்வு என்னும் இவை யிரண்டில், உயிர்களை நீதியுடைய நல்வாழ்க்கையில் நடத்திவைப்பதற்கு, அறிவின் திறமையிலும் உணர்வின் ஊக்கமே முன்வந் துதவுதல்வேண்டுமென்பது வித்தகமுடைய மேலோர்தம் துணிவு. அவ்வுணர்வினிற்கு உணவாய் அமைகின்றது அறிவு. 'மறந்தும் பிறன்கேடு சூழற்க' என்னும் வாக்கியத்தை எல்லாச் செவிகளும் ஒவ்வி ஏற்றுக்கொள்ளும் எனினும், "மறந்தும் நின்னாக்கம் நாடற்க" என்று அதே நீதியின் மறுதிறத்தை எடுத்துக் கூறினால், அறிவு அதனை ஆய்ந்து தருவதன்முன் உணர்வானது உட்கொள்ளச் சிறிது தயங்குந் தன்மையைக் காணலாம். "என்னாக்கம் நாடேனேல், எற்றுக்கு இங்கிருந்து என் செய்தேன்" என வியப்பார் மாந்தர். "பிறருக்குக் கேடு நேரவேண்டு மென்னும் கருத்துடனேயே யான் ஒரு கருமம் சூழாவிடினும், என்னுடைய ஆக்கத்தை நான் உரிமைகடவாமல் நாடித் தொடர்கையில், பிறர்சிலர்க்குக் கேடு நேர்ந்தாயின் அன்னதற்கு நான்தான் என்செய்ய" என எண்ணுவார் ஒரு சாரார். இவர் மத்திமர். இவருக்குக் கீழும் மேலும் இருவேறு இனத்தவர் இருக்கின்றனர். "எத்திறத்தின் நோக்கினும் மற்றொருவனைக் குறைப்பதாலன்றி என்னுடைய நிறைவை எய்துதற்கியலவில்லை யாதலின், பிறன்கேடு சூழற்க என்று பேசுவதெல்லாம் வீண்" என்பவர் கடையாய கொள்கையர். மற்றவர், "பிறன் கேடு சூழாவகை என்னுடைய ஆக்கத்தை நாட இயலுமிடத்து அதனை நாடிக் கொள்வதன்றோ கடன்" என்பார். இம் முத்திறத்தவர் மனத்திலும் மூலமாய மயக்கம் ஒன்றுளது. அதுதான், தன்னுடைய ஆக்கம் என்று ஒன்று உளது என்னும் எண்ணமே.

அதனாற்றான் ஒன்றினை மிகஎளிதில் மறக்கின்றனர் மாந்தர். பிறருடையஆக்கத்தைநாடாமல் தன்னுடைய ஆக்கத்தைநாடுவதே பிறன்கேடுசூழ்வதன்றிவேறன்று என்பதைத் தெளிந்துகொள்ளாத வரையில் இதன் உண்மையை உணர்தல் இயலாது. பிறன்கேடு சூழ்வதென்று ஒன்றும் உடன்பாட்டுவகையில் செய்யாவிடத்தும், தன் ஆக்கம் நாடுந்தோறும் நாடுந்தோறும், பிறருடைய ஆக்கத்தைத் தேடாது விட்டபடி கழிகின்றதாதலின், அவ்வவ்வளவு எதிர்மறை முறையில் பிறனுடைய கேட்டைச் சூழ்ந்தபடியே முடிகின்றதே. இதனை நீ மறந்தும் பிறன்கேடுசூழற்க, என்றேஉரைத்தார் வள்ளுவனார் என்று எண்ணலே முறை. இல்லையெனில், வேறு வகையில் மறந்து பிறன் கேட்டைச் சூழ்வது என்பது அழியா முரணுடைய வாசகமாக

நிற்கும். மனது ஒன்றை நினையாத நிலை மறதி, சூழ்தல் என்பது மனத்தால் ஒன்றினை நினைத்துச்செய்தல்—ஆயின், மறந்து ஒருவன் ஒன்றினைச் சூழ்வது எங்ஙனம்! ஆறலின், "உன்னுடைய ஆக்கம் என்று ஒன்று இல்லை, என்னும் மெய்ம்மையை மறந்து, இல்லாத அதனை நீ நாடப் புகுமளவில், பிறருடைய ஆக்கம் முயலப்படாமல் கழிகின்றதாதலின், அவ்வகையில், பிறர் குறைவுற்று நிற்கவேண்டிய கேட்டினை நீ சூழாதே" என்பதே இவ்வரிய வாசகத்தின் இரகசியப் பொருள். 'உன்னுடைய ஆக்கத்தை நாடாமையே உன் கடமை' என்னும் இக்கருத்தை, "சூழின் அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு" என அக்குறளில் பின்வரு மொழிகளும் நன்கு வலியுறுத்துகின்றன. சீத்தலைச் சாத்தனார்க்குத் திருவள்ளுவர் நூலின்பால் இருந்த பக்தியை யாவரும் அறிவர். இப்பொருளில் மறந்தும் பிறன்கேடு சூழாத மேன்மையை அப்புலவர், "மணிமேகலையில்" தாம் கற்பித்த ஆபுத்திரன் திறத்தில் அரிதின் காட்டினார். உயிர்நடமாட்டமற்ற மணிபல்லவத்தீவில் தனியே விடப்பட்டஆபுத்திரன், வேண்டினர்க்கு வேண்டியாங்கு அளிக்கும் தன்மைத் தெய்வக்கடிஞையைக் கொண்டுதிரிந்தும் வாங்குநர் யாரையும்காணாமையால், இறுதியில் மனம்பிதிர்ந்து, "மன்னுயிரோம்பும் இம் மாபெரும் பாத்திரம் என்னுயிர் ஓம்புதல் யானோ பொறேன்" என்று விளம்பி, அப்பாத்திரத்தினின்று உணவுஎடுத்துத்தான் அருந்தி உயிர்சுமக்க இசையாமல் அதனை ஏரியில் எறிந்து விட்டுப் பசியால் மடிந்தான். இவன், அப்பாத்திரம் கொண்டு தன்பசி தீர்ந்து உயிர்தரித்திருப்பானாயின், இவனைப் பிறர்கேடுசூழ்ந்தவனென்று சொல்லலாமோ என்னும் எண்ணமும் ஒருவரும் கொள்ளமாட்டார். எனினும், 'மறந்தும் பிறன் கேடு சூழற்க" என்னும் தேவவாக்கின் மெய்த்திற மறிந்தவன் அந்தப் பெருந்தகை. பிறரை உண்பிக்க இயலாவிடத்துத் தான் உண்டிருந்து வாழ்வதும் பிறன்கேடு சூழ்வதே என்பதை மறவாமற் காத்தான்.

எனின், 'மறந்தும் பிறன்கேடு சூழற்க' என்பதும், 'மறந்தும் நின்னாக்கம் நாடற்க' என்பதும், ஓரே உண்மையின் இருபுறங்களாவது புலப்படும். முன்னது அறவுரை, பின்னது அறந்தானே யாகும். ஒரு நீதிவாக்கியத்திற்கும் அந்நீதிக்கும் உள்ள ஒற்றுமையூடு கிடக்கும் வேற்றுமைத்தோற்றமேயன்றி வேறன்றிது. நீதிவாக்கியத்தை யாவரும் ஒவ்வுவார் ஆயினும் அந்நீதியை நெறிமுறை நிகழ்த்ததுதற்கோ கலங்குவார். இவ்வாறு கலங்குவதற்குக் காரணம், அறிவின் வளப்பத்தால் முதிராத உணர்வின் குழப்பமே என்பதைக்காணல்வேண்டும். மற்றெல்லா நீதிகளும் நிகழ்த்தப்படாமற் போவதன் காரணமும் இதுவே. அறிவின் முதிர்ச்சிக்குரிய பயிற்சிகளைச் செய்து தெருண்டிராத மனம், யாதினும் எளியது நீதியே என்பதை அயர்ந்து, "நீதிவாக்கியம் இது நன்றே, மற்று, அதனை நிகழ்த்துவது ஆகாத தொன்றன்றோ" எனச் சோர்ந்து நிற்பதுமன்றி அதற்கு மாறுகக் கைகளைச் சுழற்றவுந் தலைப்படுகின்றது. அறிவுடை உணர்வோ, நீதி வாக்கியங்களை மாத்திரமன்றி நீதிகளையும் உட்கொள்ளும்; அறிவில்லா வுணர்வு நீதிவாக்கியத்தைப் பாராட்டிப் பின், அந் நீதியை நிகழ்த்துவதற்கு அஞ்சும். உணர்வில்லா அறிவோ, நீதிவாக்கியத்தையே பரிகசிக்கும். G. K. செஸ்ட்டர்டன் என்னும் ஆங்கில அறிஞர் இவ்விடயத்திலடங்கிய நுண்மையைப் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றார்—

"The work of Tolstoy represents the re-assertion of a certain awful common-sense which charecterised the most extreme utterances of Christ. It is true that we cannot turn the cheek to the smiter; it is true that we eannot give the cloak to the robber; civilisation is too complicated, too vaingiorious, too emotional. The robber would brag, and we should blush; in other words, the robber and we are alike sentimentalists. The command of Christ ir impossible, but it is not insane; it is rather sanity preached to a planet of lunatics. If the whole world was stricken with a sense of humour it would find itself mechanically fulfilling the Sermon on the Mount. It is not the plain facts of the world which stand in the way of that consummation, but its passions of vanity and self-advertisement and morbid sensibility. It is true that we cannot turn the cheek to the smiter, and the sole and sufficient reason is that we have not the pluck."

ஆம், நீதியின்படி நம்மை நிகழ்த்திக்கொள்வதற்குரிய வீரம் போதாமையேதான் காரணம். நீதியின்படி நிகழ இயலாதென்பது வாய்மையன்று. இயலும் இயலும், முக்காலத்திலும் இயலும். உள்ளுணர்வோ இதனை ஓயாமல் உணர்த்தி நிற்கின்றது. ஆயினும் அவ்வுணர்வின் முயற்சியை வீரத்தின் ஊக்கமாகமாற்றுதற்கு வேண்டிய அறிவின் பயிற்சையை அடையப்பெறுமல் கிடக்கின்றோம். கிரேக்க வித்தகர் ஸாக்ரிடீஸ் இயம்பிய வண்ணம், பிறரால் நமக்கு என்ன தீமை நேருமோ என்று அஞ்சுவதைவிட்டு, நம்மால் பிறருக்கு மறந்தும் என்ன தீமை நேர்கின்றதோ என்று அஞ்சி அஞ்சி எண்ணப் பயில்வோமாயின், 'மறந்தும் நின்னலம் நாடற்க" என்ற நீதியை நிகழ்த்தற்குரிய வீரம் வாய்ந்தவர்களாவோம். இவ்வீரமே உணர்வின் இயற்கை; அது அறிவினுல் விளக்கம் பெறுமையே குறை.

இவ் விளக்கம் வாய்க்குமாயின், இக்காலம் வாழ்க்கைமுறைகளில் உள்ள நன்மைகள் சிலவற்றைத்தீமைகள் என்றும், தீமைகள் சிலவற்றை நன்மைகள் என்றும் மயங்கித் தலைதடுமாறி, 'முன்னேற்றம் முன்னேற்றம்' என்று முழங்குகின்ற இழிவான மனப்பான்மை ஒழியும். அது ஒழிந்தாலன்றி உலகம் ஒருநாளும் உய்யாதென்றும், இவ்விழிவினை வளர்த்துத் தருவன வர்த்தமானப் பத்திரிகைகளே என்றும் பெல்லாக் என்பவர் கூறுவதிற் சிறிதேனும் பொய்யில்லை. வர்த்தமானப் பத்திரிகைகளினின்றும், அதற்குத் தாம் இரையானது போதாமல் மற்றவர்களையும் இரையாக்க முயலும் சீர்திருத்தகாரர்கள் அறியாமற் செய்யும் கொடுமைகளினின்றும் நம்மைக் காத்து வைப்பதற்கு, அறியவரும் விடயங்களை ஆய்ந்து ஆய்ந்து உட்கொள்ள இயலும்வண்ணம் உணர்வினைப் பண்செய்தளிக்கும் பெருமைவாய்ந்த பண்டைக் காவியங்களின் பயிற்சி யல்லது, பேரறிவும் நல்லுணர்வும் உடைய பெரியோர், எவ்விடத்தும்எக்காலத்தும், கைகண்ட மருந்து வேறொன்றிருக்கின்றதெனக் கருதிய பரிசு யாம் எங்குங் காண்கிலம். இக் காட்சிக்கிணங்கவே தன் கட்டுரைகளை யமைத்துத் தருகின்றது கலாநிலயம்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[505-வது பக்கத் தொடர்ச்சி]

ஆசைக் கடலு மன்பின் திரையும்

மாளுகுதி என்று இராவணனல் முன் ஏவப்பெற்ற மாரீசனும், அம் மானின்பின்போனன் பின்னர் இங்குச் சீதையால் செலுத்தப்பெறுகின்ற இலக்குவனும் ஒருவகையில் ஒத்ததோர் மனநிலை யுடையராயமைந்த தன்மை யறிதற்குரியது. இருப்பினும் உளது கேடு செல்லினும் விளையும் என இருவரும் மனம் உளைந்தனர். எனினும் இருவருக்கு மிடையே யோர் வேற்றுமையும் உளது. இருப்பினும் செல்லினும் தீது சேர்வது தனக்கே யென வருந்தினன் அரக்கன்; மற்றிவ் விளைய வள்ளலோ, இருதிறத்தும் சீதைக்கே சேரநின்ற இடரினுக்கிரங்கி இனைகின்றனன். இரக்கமில் நிருதனேனும் அருள்நிரம்பிய மனிதனேனும் இருவருக்குந் துன்பமில்லாமலில்லை. தனக்கொரு துன்பம் வருமென நின்றபோது நனி வருந்துவான் அரக்கன், பிறர்க்குவரும் இன்னல்கண்டு வருந்துவான் மனிதன். இவ்வேற்றுமையால் இவ்விரு இனத்தோரும் விலகுந் தூரம் சிறியதன்று. ஆங்கிலப்புலவர் தாமஸ் க்ரே (Thomas Gray) என்பவர்,

> To each his sufferings : all are men
> Condemn'd alike to groan—
> The tender for another's pain,
> Th' unfeeling for his own.

[ஒவ்வொருவருக்கும் அவரவர்க்கு உரிய வருத்தங்கள் உள. அனைவரும் மனிதரே, அனைவரும் ஒரு படித்தாய் மறுகுறுதற்கே விதிக்கப்பட்டவர்-இளகிய இதயத்தவன் பிறனெருவன் துன்பத்திற்கு வருந்துகின்றான், இளகாத வன்னெஞ்சன் தன்னுடைய துன்பத்திற்கே வருந்துகின்றனன்—இதுவே வேற்றுமை.]

எனச் செப்பிய அச்சொற்கள் இங்குச் சிந்தித்தற்குரியன. தன்னுடைய துன்பத்திற்கே மறுகுகின்ற வன்னெஞ்சனையும், பிறர்படும் இன்னலுக்கிளகி இரங்குவோருடன் மனித இனத்திற்சேர்க்கின்றார் அவ்வாங்கிலக் கவிஞர். இதற்கெதிர், கம்பர்பிரானோ, தன்னுடைய இன்னலுக் கினைபவன் எந்நாளும் மனிதனெனற்காகான்எனக்கொண்டு அப்பெற்றியைமாரீசனும் அரக்கனிடத்தும், பிறர் இன்னல் கண்டு மறுகுறுமவனே மனிதனெனற் குரியவனென்பதை இலக்குவனிடத்தும், ஓரே நிலையின் இருவேறு முகத்தைப் பிரித்துக் காட்டிப் பொலிகின்றார். தாமஸ் கார்லைல் என்னும் ஆங்கில அறிஞரும் இத்திறத்தில்நம் தமிழ்க் கவியரசினோடு ஒக்க நினைக்கும் அருமை அவர்தம் நூலினைப் பயின்றிருப்பவர் மனத்தின்கண் இச்செவ்வியில் தோன்றி எழும். "எனக்கு இவ் வின்னல் நேர்ந்துளதே உளதே" என்று விளம்பிப் புலம்புவாரைப் புறக்கணித்து, "அதனுல் யாருக்கு என்" என்று இழிவுறக் கழற வேண்டுவார் கார்லைல். கார்லைலுக்குக் கம்பர் சோர்ந்திருப்பாரோ! இருவரும் மனிதரே என்றுரைத்த க்ரேய்க்குத்தான் இணங்குவாரோ. ஒருவனை அரக்கனுக்கினர்; மற்றவனை,

> இருப்பனே லெரியிடை யிறப்ப ராலிவர்
> பொருப்பனை யானிடைப் போவெ னேயெனின்
> அருப்பமில் கேடுவந் தடையு மாருயிர்
> விருப்பனேற் கென்செய லென்று விம்மினன்

[இங்கு இருப்பேனேயாயின் சீதை தீயில் விழுந்து மாள்வாள். மலைபோன்ற இராமனிடம் நான் பேவேனேயாயின், காவலில்லாத காரணத்தால் இவளுக்குக் கேடு வந்துசேரும். இந்நிலையில் என்னுயிரை மாய்த்துக்கொள்ளாமல் ஆசையுடன் தாங்கியிருக்கும் புல்லனாகிய நான் என்ன செய்யக்கிடக்கின்றது என்று மறுக்கமுற்றான்]

எனக் கூறவைத்து மனிதன் ஆக்கினார். பிறரைத் துன்புறுத்துபவர் முழுவரக்கர்; பிறரிழைத்த இடுக்கணை நினைத்துத் தன்னைப்பற்றி இரங்குபவர், மாரீசனைப் போல், அரை அரக்க ராவார்; மற்று, பிறர் உறநின்ற இடுக்கணைக் கருதி இரங்குகின்ற இலக்குவன் அனையரே மனிதர் ஆகின்றார் என்னும் வாய்மையை இவ்வரியநிலையிற் கம்பர் எடுத்துக் காட்டுவாராகின்றார்.

தான் செல்லாது நின்றக்கால் சீதை எரி வீழ்ந்து சாகின்றாள், நில்லாது சென்றக்கால் பேரிடர்ப்படுவாளாவாள், என்னக் கிடந்த அவ்வேளையில் செயற்பாலது யாதென உன்னியுன்னி உழைத்த அவ்விளவல் இரண்டன் முடிவையும் நுனித்து ஆராய்ந்து,

> அறந்தனு லழிவில தாகி னுக்கலாம்
> இறந்துபா டிவர்க்குறு மிதனி னிவ்வழி
> துறந்தபோ மிதனையே துணிவென் றெல்வினைப்
> பிறந்துபோந் திதுபடும் பேதை யேனென

[நான் காவல்விட்டுச் சென்றாலும் ஒருகால் தருமமானது தனது காவலால் இவளுக்கு அழிவில்லாமற் செய்தாலும் செய்யலாம். ஆதலின் என்னுடைய பழைய வினையினுல் பிறவி எடுத்து இந்த அவத்தைப்படும் பேதையாகிய நான், இருந்தால் இவளுக்கு மரணம் நிச்சயமாகின்ற இதனைவிட இவளை விட்டுப் போகவே துணிவேன்-என்று]

> போவது புரிவல்யான் புகுந்த துண்டெனிற்
> காவல்செ யெருவையின் றலைவன் கண்ணுறும்
> ஆவது காக்குமென் றறிவித் தவ்வழித்
> தேவர்செய் தவத்தினுற் செம்ம லேகினன்

[சீதையை நோக்கி, "நான் போகின்றேன், ஏதேனும் தீங்கு நேருமாயின் காவல் புரிகின்ற கழுகரசனுகிய சடாயு கண்டு செய்யவேண்டுவன செய்து காப்பான்," என்று தெரிவித்து, தேவர்செய்த தவத்தின் பயனுக இலக்குவன் அவ்வழிச் சென்றான்]

தேவர்செய் தவத்தினுல் இலக்குவன் ஏகியவாங்கே, தான்செய்த அவத்தினுல் இராவணன் அவ்வயின் வந்துசேர்ந்தனன். ஆயினும், அவ்வவம் இன்று தவவேடந் தாங்கி வருகின்றது.

இளையவன் ஏகலும் அற்றம் பார்த்திருந்த வளையெயிற்று இராவணன் தான் கருதிய வஞ்சனையை முடிக்கும்பொருட்டு, திரிதண்டத்தைஏந்தி, முப்பகை வென்ற தவசியின் வேடந்தாங்கி, உணவு கொள்ளாது மெலிந்து உலர்ந்த மேனிகாட்டி, நெடுந்தூரம் நடந்த இளைப்புடையவனுகி, விஞகானம் போன்ற இனிய இசையுடன் சாமவேதம் பாடிக்கொண்டு, குந்திமிதித்துச் செல்லும் குறுநடை நடந்து, காலுங் கையும் நடுங்க, மூப்பு என்னும் பருவமே கண்டு வெறுக்கத் தகுந்தபடி வயது முதிர்ந்தவனுய், தாமரைமணி மா

லையை உந்திய விரலும் ஆமைமணையை ஏந்தியகையும் உடையவனாகி, பூணூல் புரண்ட மார்பொடும், தூமனத்து அருந்ததியிருந்த இடம் வந்து,

தோமறு சாலையின் வாயி னண்ணினான்
நாமுதற் குழறிட நடுங்கு சொல்லினான்
யாவரிவ் விருக்கையு ளிருந்து ளீரென்றான்
தேவரு மருள்கொளத் திரிந்த மேனியான்

[தேவரும் உண்மையறியமாட்டாமல் மயங்கும்படி மாறிய வடிவம் உடையவனாகி, குற்றமற்ற பர்ணசாலையின் வாயிலைச் சேர்ந்து, நாவானது அடியோடு குழறுகின்ற சொற்களினால், இங்கு இருக்கின்றவர் யார், என்று வினவினான்]

“அழகான காவித்துணி யுடுத்து, தலையிலொரு சிறு குடுமி வைத்து, கையிற் குடைபிடித்து, பாதங்களிற் செருப்பணிந்து, இடத்தோளில் தண்டமுங் கமண்டலமுந் தாங்கிச் சந்நியாசி உருவம் பூண்டு, சீதை இருந்த இடத்துக்கு இராவணன் வந்து சேர்ந்தான்” என்று வான்மீகி முனிவர் சுருங்கக்கூறிய இதனையே கம்பர் சிறிது விரிவாக நாலைந்து பாசுரங்களில் எடுத்துப் பேசினார். தாமுமோர் தவசியாதலின், தம்மனோர்க்குரியவத் தூய தோற்றத்தை வஞ்சகக்கள்வன் ஓர் அரக்கன் பூண்டபெற்றியை நெடிதுநோக்கிப் பலபடப்பகர்வதற்கு வான்மீகிமுனிவர் மனங்கொண்டிலர் போலும். எனினும், தேவரும் மருள்கொள அந்நிருதன் கொண்டதோர் தவக்கோலத்தைக் கம்பர் விரிவுற வருணித்தது, கற்புடைய சீதையும் அயிர்க்கா திருந்ததற்காதாரம் ஆதற்கெனினு மமையும். வேடத்தின் அமைதியைக் கண்டோ, அல்லது, தூய்மையின் கோலம் இத்துணைச் சிறப்புறக்கொண்ட இராவணன் தான் தாங்கிய மாயவேடத்திற்குத் தானே ஒருகால் வயமாகி எண்ணிய வஞ்சனையை இயற்றமாட்டாக் கூச்சமுடன் மீள்வான் என அஞ்சியோ அமரர் மருள் கொள்வாரெனக் கம்பர் இயம்பினார்? வேறொன்றும் அம்மருட்கைக்குக் காரணமாகலாம். தவக்கோலம் பூண்டிருந்த இராகவனை இனிது நோக்கி, மயல்கொண்ட சூர்ப்பணகை,

எவன்செய வினியவிவ் வழகை யெய்தினான்
அவன்செயத் திருவுடம் பலச நோற்கின்றான்
நவன்செயத் தகையவிந் நளின நாட்டத்தான்
தவன்செயத் தவன்செய்த தவனெ னென்கின்றாள்

[இனிய இந்த அழகை எய்திய இவன், எதற்காக, இவ்வழகு வீண்போகும்படி தன் அழகிய உடம்பு வாடத் தவம் செய்கின்றான்? பார்க்கப் பார்க்கப் புதுமை விளைக்கும் இந்தத் தாமரைபோன்ற கண்களையுடைய இவன் தவம் செய்யும்படி அந்தத் தவந்தான் செய்துள அருந்தவம் யாதோ—என்று வியக்கின்றாள்]

என்று முன்னர்க் கூறியிருப்பதை நினைவிற் கொண்டக்கால், இங்குத் தேவரும் மருள்கொள இராவணன் பூண்டிருந்த வேடம் அதற்கு எதிர்முறையாகி நிற்றல் புலப்படும். தேவதேவனாகிய இராகவன் தவவேடந் தலைக்கொள்ள அத் தவந்தான் எத்தவம் செய்ததோ என மருண்டாள் முன் ஓர் அரக்கமகள் எனின், பாதகம் பெரிதுடை இவ்வரக்கன் தவவேடந் தாங்கிவர அத் தவந்தான் என்ன அவஞ் செய்ததோ என்று தேவர் மருளநேர்ந்தது நேரிதே. கம்பர்பால் கற்றுத் தேர்ந்து, வேண்டின பிறர்க்கு வேண்டியவற்றை அளிக்கும்பொருட்டுத் தண்டகவனத்து இருடிகள் பூண்டிருந்த மெய்த்தவமேயாகி நில்லாமல், திருவள்ளுவர்தம் உரைக்கிணங்கத் தாமே வேண்டிய வேண்டியாங்கு எய்துதற்கு முயன்ற செய்தவத்தவர் சார்பினும் நின்ற பாவத்தால், இன்று இக் கைதவமுடைய நெஞ்சினனது பொய்வேட மாகவேண்டிய கதி அந்தத் தவத்தினைக் கதுவிக்கொண்டதோ என்றோர் ஐயுறவு பாராட்டவும் கூடும்.

ஆவதாகுக, வடநூன்முனிவர் வகுத்த வண்ணம், “புல்லால் மூடப்பட்ட கிணறுபோலக் கொடியவனாகிய இராவணன்” அவ் விருக்கையில் இருந்து யாரெனக் கேட்டவுடன்,

தோகையு மிவ்வழித் தோமில் சிந்தனை
சேகறு நோன்பின ரென்னுஞ் சிந்தையாள்
பாகியல் கிளவியாள் பவளக் கொம்பர்போன்
றேகுமி னீண்டென வெதிர்வந் தெய்தினாள்

[மயில்போன்ற சீதையும், இவ்விடத்திற்கு வந்திருக்கின்ற யாவரோ குற்றமற்ற தவவிரதமுடைய பெரியவர் ஒருவர் வினவுகின்றார் என்று சிந்தித்து, பாகுபோன்ற மொழியுடையளாய், ‘இங்கு வாரும்’ என்று அழைத்துக் கொண்டு, பவளக்கொடி போன்று அவனுக்கு எதிரில் வந்து சேர்ந்தாள்]

அவ்வளவில்,

வெற்பிடை மதமென வியர்க்கு மேனியன்
அற்பினற் றிரைபுர ளாசை வேலையன்
பொற்பினுக் கணியினைப் புகழின் சேக்கையைக்
கற்பினுக் கரசியைக் கண்ணி னோக்கினான்

[யானையிடத்தில் பெருகும் மதநீர் போல வியர்க்கின்ற உடலையுடையவனும், அன்பு என்னும் நல்ல அலைகள் புரள்கின்ற ஆசையைக் கடலளவு கொண்டவனுமாகிய இராவணன், அழகிற்கு அணிபோன்றவளும் புகழிற்கு இருப்பிடமானவளும், கற்பினுக்கு அரசியும் ஆகிய சீதையை, (முன் சூர்ப்பணகை சொல்லக் கேட்டதன்றி) இப்பொழுது தன் கண்களால் நோக்கினான்]

என, இந்நாடகத்தின் நடுநிலை நிகழ்ச்சியாகிய இக்காட்சியைக் கம்பர் துவக்குகின்றார். ஆசை அன்பு என்னும் இவ்விரு சொற்கள் பொதுவுறத் தம்முள் உறழ்ந்துவருமேனும், சிறப்புவகையில், தான் ஒன்றினை வௌவித் துய்க்கவேண்டும் என்னும் கிளர்ச்சியை ஆசை என்னுஞ் சொல்லும், தன்னைப் பிறர்க்கு அளித்து நிற்கவேண்டும் என்னுங் கிளர்ச்சியை அன்பு என்னுஞ் சொல்லும் குறிப்பது முறைமையாகும். “ஆசைக்கோர் அளவில்லை,” என்றும் “தாயொக்கும் அன்பில்” என்றும் பயின்றுவருந் தொடர்கள் இவ் வேற்றுமையைச் செவ்விதின் வகுத்துக் காட்டவல்லன. சீதையை வௌவித் தான் கொள்ளவேண்டுமெனும் ஆசை கடலளவு பெருகப்பெற்றவனேனும், பொற்பினோடு கற்பினுக்கு மணியாகிய அச் சீதையைக் கண்டவுடன், அவ் வாசைக்கடலின்மீது அன்பின் நல்ல திரைகளும் புரளும் செவ்வியனாயினான் இராவணன், என்று செப்பவல்ல புலமை கம்பரே யனையார்க்கல்லால் வாய்த்தலருமை. முடிவிலா மோகம் மூண்டெழ ஈண்டிப்போந்த இராவணன் கற்பினுக்கரசியைக் கண்ணின் நோக்கிய காரணத்தால், தனது ஆசையையும் ஒருவாறு அயர்ந்து சிந்தையில் தூய்மை தோன்ற அன்பினால் தன்னை அவளுக்கு முறைசெய்து அளிப்பதெங்ஙனமென அலைப்புறுகின்றவனாகின்றான். சீதையின் தெய்வக் கற்பினுக்கு இதனினும் பெருமை

வேறு வேண்டா. ஒருவன் எத்துணைக் கொடியோனேனும், அவனுடைய இதயத்திலும் அன்பிற்கு இளகவல்ல மூலை ஒன்று இருத்தற்கியலும் என்னும் வாய்மையைக் காட்டத் துணிவதற்கு நுண்ணிய நாடகத்திறமை நனிமிகவேண்டும். (இத்தகைய நுட்பத்தை ஷேக்ஸ்பியரினுங் காணலாம்) இனிவரும் ஆறு செய்யுள்கள் இராவணனது இத் தன்மையை எடுத்துக் காட்டும் பெற்றியன—

தூங்கலி னுருவினைச் சொல்லி னும்பரும்
ஓங்கிய வழகினா ளுருவங் காண்டலும்
ஏங்கினன் மனநிலை யாதென் றுன்னுவாம்
வீங்கின மெலிந்தன வீரத் தோள்களே

[மிகுந்த அழகுடைய சீதையின் உருவத்தைக் கண்டவுடன் ஏங்கிய இராவணனது மனநிலை எத்தகையது என்று எண்ணுவோம். மற்று, அசைந்து ஆடுகின்ற அவன் உடலினது நிலையைப்பற்றிச் சொல்வதாயின் சொல்லலாம்—அவன் வீரம் வாய்ந்த தோள்கள் மேன்மேல் மாறி மாறிப் பெருப்பதும் இளைப்பதும் ஆயின]

என்னுங்கால், உன்னுவதன் அருமையால் அவன் மனநிலையைச் செப்பாமல், தோள்கள் வீங்கி வீங்கி இளைக்கும் மெய்ப்பாட்டினை இயம்பி அவன் மனநிலையை ஊகித்துக்கொள்ளுமாறு கம்பர் நம்மையே நம்பி விட்டுவிடுகின்றார். முன்னுரைத்தபடி, அன்பின் உவகையால் அவை பூரித்தன வென்றும் ஆசையின் அவலத்தால் இளைத்தன வென்றுந் தேர்தல் அருமையன்று.

புனமயிற் சாயலி னெழிலிற் பூநறைச்
சுனைமடுத் துண்டிசை முரலுந் தும்பியின்
இனமெனக் களித்துள தென்ப தென்னவன்
மனமெனக் களித்தது கண்ணின் மாலையே

[வனத்தில் திரியும் மயில்போன்ற சாயலையுடைய சீதையின் அழகினால், இராவணனது கண்வரிசை, மலர்களின் தேன் தங்கிய சுனையினின்று பருகி இசைபாடுகின்ற வண்டுக்கூட்டத்தைப் போல் களித்தது என்று எவ்வாறு சொல்வது? அவன் மனம்போலவே கண்களும் களித்தன வென்றே கூற இயலும்]

என, அவன் கண்களும் ஆசையோடொருபோது பசித்து நோக்கலும் அன்பினால் மறுபோது இளகிக் காண்டலும் ஆயினவென்று சாற்றும் புலவர் அன்னதற் கவன் மனத்தையே மீண்டும் ஒப்பாக்குகின்றார்.

தோளின் நிலைமையுங் கண்களின் தோற்றத்தையும் தெரிவித்தபின் இராவணன் சிந்தனை சென்றவண்ணம் யாதென இனிச் செப்புகின்றார்.

அரைகடை யிட்டமுக் கோடி யாயுவும்
புரைதபு தவத்தின்யான் படைத்த போதுமே
நிரைவளை முன்கையிந் நின்ற நங்கையின்
கரையறு நன்னலக் கடற்கென் றுன்னினான்

[வளையல் வரிசைகளை யணிந்த முன்கையை யுடையளாய் இங்கு எதிர்நிற்கின்ற இந்த நங்கையின் கரையற்ற நல்நலங்களாகிய கடலிற்கு, குற்றமற்ற தவத்தினால் யான் படைத்த மூன்றரைக்கோடி ஆயுளும் போதுமோ-என்று எண்ணினான்]

சீதையின் நலன்களைக் கடலாக வைத்து அதனிற்குத் தான் முறைசெய மூன்றரைக்கோடி ஆயுளும் போதாதென்று வருந்துமிதுவும் அன்பினது ஆர்வத்தின்பாற் படும். பின்னரும்,

தேவரு மவுணருந் தேவி மாரொடுங்
கூவல்செய் தொழிலினர் குடிமை செய்திட
மூவுல கமுமிவர் முறையி னாளயான்
ஏவல்செய் துய்குவெ னினியென் றுன்னினான்

[தேவர்களும் அசுரர்களும் தங்கள் தங்கள் மனைவிமாரோடு குற்றேவல் செய்து அடிமைகளாம்படி மூன்று உலகங்களையும் இச்சீதையானவர் ஆட்சி செய்ய நான் இனி இவருக்குக் குற்றேவல் செய்து கடைத்தேறுவன்-என்று எண்ணினான்]

சீதையைத் தன்னுடைமை யாக்கிக்கொள்ளும் ஆசையின்றித் தன்னையே அவளுக்கு அடிமையாக்கி அதனால் உய்யவேண்டும் என்னும் ஊக்கங்கொண்ட இது வஞ்சனாய்வந்தோன் நெஞ்சத்துதித்த ஒருசிறு தூய்மையின் துளக்கமல்லது மற்றொன்று மன்று. ‘இவள்’ என்னாது ‘இவர்’ என்று உயர்வுப்பன்மையானுரைத்ததும் அத்தருணம் அவன் மனத்தின் உயரத்தையே காட்டும். இதுகாறும், தவவேடம் தாங்கி வந்த இராவணனன்றி, அவன் தாங்கிய தவத்தின் மானமே இன்னவாறு சிந்தித்ததுபோலும். ஆயினும், இங்ஙனம் தான் கொண்ட கோலத்தின் தூய்மையால் தூண்டப்பெற்று இவ்விராவணன் சீதையைப் பற்றிக்கொண்டு ஏகுதலின்றியே அவர்க்குஏவல் செய்து உய்பவனேயாவானோ என அமரர்தாம் நெடிதஞ்சி மருளவேண்டா. ஏனெனில்,

உளைவுறு துயர்முகத் தொளியி தாமெனின்
முளையெயி றிலங்கிடு முறுவ லென்படுந்
தளையவிழ் குழலிவட் கண்டு தந்தவென் [னான்.
இளையவட் களிப்பெனென் னரசென் றெண்ணி

[வருத்தம்செய்யும் துயர்பொருந்திய காலத்திலேயே இவள் முகத்தின் ஒளி இத்துணைச் சிறந்திருக்குமாயின், தோன்றும் பற்கள் பிரகாசிக்கப் புன்னகை புரியும் அழகு எத்தன்மையதாகுமோ! கட்டவிழ்ந்த கூந்தலையுடைய சீதையை இங்கே கண்டு எனக்குக் காட்டித்தந்த என் தங்கைக்கு என் அரசினைக் கொடுப்பேன் - என்று எண்ணினான்]

இது, போர்த்திருந்த பசுவின்தோல் வாயடங்கப் புலியே பேசும் பெற்றியது. தான் சீதையைப் பெற்றுத் துய்க்கும் புந்தி இங்குத் தலையெடுக்கப் புகுகின்றது. ‘தளையவிழ் குழல் இவள் கண்டுதந்த’ எனப் பிரித்துக் கொள்வோமாயின், முன் செய்யுளில் இவர் என்றுரைத்த உயர்வுப்பன்மை நீங்கி, இராவணன் தன்னுடைய ஏற்றமே தோன்றும்படி சிந்தித்த பொருள் விளைந்து, இக்கருத்தைப் பின்னரும் வலியுறுத்தும். முன் சீதைக்கு முறைசெய்தளித்த அரசினைப் பறித்து இங்குத் தன் தங்கைக்குப் பரிசிலாய்ப் பகர்ந்துவிடுகின்றான். எனின் அன்பின் நற்றிரை ஒடுங்க இனி இப்புன்மையோன்பால் பண்டைய ஆசைக்கடலே கால்கிளருந் தன்மையை,

ஆண்டையா னனையன வுன்னி யாசைமேன்
மூண்டெழு சிந்தனை முறையி லோன்றனைக்
காண்டலுங் கண்ணினீர் துடைத்த கற்பினாள்
ஈண்டெழுந் தருளுமென் றினிய கூறினாள்

[அத்தகையவன் அன்னவைகளை எண்ணி, ஆசையானது மேற்பட மூண்டு எழுகின்ற சிந்தனையால் முறைகெட்டவனான இராவணனைக் கண்டவுடன், தன் கண்களிலிருந்து நீரைத் துடைத்துக்கொண்ட கற்பினளாகிய சீதை, ‘இங்கே எழுந்தருளுங்கள்’ என்று இனியமொழிகளைக் கூறினாள்]

என வரும் இச்செய்யுள் ஐயமறக் காட்டுகின்றது. மாசுணந் தீண்டி மாய்ந்த தன் மைந்தனைப் பாயினுட் சுருட்டிவைத்துத் தடுமாற்றமிலளாகி, விருந்துவந்த வாகீசருக்கு அமுதுசெய்விக்க நேர்ந்த அந்தஅப்பூதியடிகளின் நன்மனைவி யென்ன, இவ்வனிதையும் இங்குப் பொய்வேடத் துறவியை உபசரிக்குங்கால் தன் துயர் தோன்றாவண்ணம் கண்ணீர்துடைத்த கற்பினையினாள்.

இராவணனும், மூண்டெழு மோகத்தினனாய் அவளிழைத்த வழிபாடு வந்தனைகளை ஏற்று அந்தத்தூய சாலையின் இருந்தபோழ்து

நடுங்கின மலைகளு மரனு நாவவிந்
தடங்கின பறவையும் விலங்கு மஞ்சின
படங்குறைந் தொதுங்கின பாம்பும் பாதகக்
கடுந்தொழி லரக்கனைக் காணுங் கண்ணினே

[கடியதொழில் புரியவிருந்த இராவணனைக் கண்ணிற் கண்ட அளவிலே, மலைகளும் மரமும் நடுங்கின, பறவைகளும் குரல் அடங்கி ஒடுங்கின, மிருகங்களும் அஞ்சின, பாம்புகளும் படங்களை ஒடுக்கிக்கொண்டு மறைந்தன]

என அங்நிலையின் கொடுமையை அறைகின்றார் கம்பர். இதனை, "கொடிய செயல்களைச் செய்யும் அப்பாவியைக் கண்டு ஜனஸ்தானத்திலிருந்த மரங்கள் அசையவில்லை, காற்றும் அடிக்கவில்லை; அவன் தனது சிவந்த கண்களால் சீதையைப் பார்த்த பார்வையைக் கண்டு பயந்து வெகு வேகமாக ஓடும் கோதாவரி நதியும் தனது வேகம் அடங்கிற்று" என வுரைத்த அவ்வான்மீகமுனிவர் வாக்கினின்றே கம்பர் வாங்கிக் கொண்டிருக்கின்றார். எனினும் இராவணன் வருகையோடு நிகழ்ந்தனவென்று வடநூலால் கூறப்பட்ட இவைகளை, இராவணன் வந்தும் அவன்பால்புரண்ட அன்பின் அலைகள் புரண்டவரையிலும் பேசாமல், அவன், "ஆசைமேல் மூண்டெழும் முறையிலோன்" ஆனபின்னரே நிகழ்த்திய இது, தன் கருத்திற் கேற்புடைப் பெற்றியில் இடம் பெயர்த்து அமைக்கின்ற கம்பர்தம் நாடகவாற்றலைச் சுவைபடக் காட்டுகின்றது. சிற்றன்னை சொற்கிணங்கி வனஞ்செல்வான் இராமன் விடைகொள வந்துநிற்க, "நின் வெண்கொற்றக் குடை எங்கே, மஞ்சனப் புனிதநீரால் உன் குஞ்சி ஏன் நனைந்திலது, அரசிற்குரிய அங்கங்கள் ஒன்றும் உன்பால் காணாததற் கென்ன காரணம்" என வான்மீகத்தில் சீதை வினவியிருக்க, தன் மனையாளொருத்தியின் கண்களுக்குத் தன் நாயகனது செல்வத்தின் நிலைமைவேறுபாடு தோன்றலாகா தென்னுந் தன்மை நோக்கிய கம்பர், இவ்வுரைகளைச் சீதை வாயினின்று பெயர்த்தெடுத்து, குழைக்கின்ற கவரியின்றிக் கொற்ற வெண் குடையுமின்றித் தன்பால் வந்த இராமனை நோக்கிய அன்னையாம் கோசலைக்கே, "புனைந்திலன் மௌலி குஞ்சி மஞ்சனப் புனிதநீரால் நனைந்திலன் என்கொல்" என விளைந்தவோர் ஐயமாம்படி கம்பர் மாற்றினார். இருநூல்களிலும் சொற்களொன்றே, அச்சொற்களுக்குரிய பாத்திரங்கள்தாம் அங்கு மாறின. இங்கு, மரம் மலை முதலியன புகுந்த நிலையொன்றே, காலந்தான் சிறிது மாறியது. ஆயினும், இத்தகைய மாற்றங்களுக்குத் தூண்டுகின்ற கம்பர்தம் காட்சித் திறமையோ சிறியதன்று.

கலித்தொகை

[509-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 16.

திறைதந்த பகைவர்நாட்டைக் காக்கரும்பொருட்டுத்தலைவன் பிரியப்போவதைத்தலைவி உணர்ந்துநடுங்கினாள். அதனைக் கண்ட தோழி, தலைவனையடைந்து தலைவியினது ஆற்றாமையையும் அவன் பிரியின் அவள் இழப்பனவற்றையும் எடுத்துக் கூறி அவன் செலவை விலக்கினாள். பின்னர் அவள் அச்செய்தியைத் தலைவிக்குக் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

படைபண்ணிப் புனையவும் பாமாண்ட பலவணைப்
புடைபெயர்ந் தொடுங்கவும் புறஞ்சேர வுயிர்ப்பவு
முடையதை யெவன்கொலென் றூறளந் தவர்வயி
னடைசெல்லாய் நனியேங்கி நடுங்கற்கா ணறுநுதால்!

தோல்லெழி றொலைபிவ யேருழப்பத் துறந்துநீ
வல்வினை வயக்குதல் வலித்திமன் வலிப்பளவை
நீள்கதி ரவிர்மதி நிறைவுபோ னிலையாது
நாளினு நெகிழ்போடு நலனுட னிலையுமோ?

ஆற்றனோ யடவிவ ளணிவாட வகன்றுநீ
தோற்றஞ்சா றொகுபொருண் முயறிமன்! முயல்வளவை
நாற்றஞ்சா னளிபொய்கை யடைமுதிர் முகையிற்குக்
கூற்றூழ்போற் குறைபடூஉம் வாழ்நாளு நிலையுமோ?

வகையெழில் வனப்பெஞ்ச வரைபோக வலித்துநீ
பகையறு பயவினை முயறிமன் முயல்வளவைத்
தகைவண்டு புதிதுண்ணத் தாதவிழ் தண்போதின்
முகைவாய்த்த தடம்போலு மிளமையு நிலையுமோ?

எனவாங்கு,

போருந்தியான்றான்வேட்ட பொருள்வயி னினைந்தசொற்
றிருந்திய யாக்கையுண் மருத்துவ னூட்டிய
மருந்துபோன் மருந்தாகி மனனுவப்பப்
பெரும்பெயர் மீளி பெயர்ந்தனன் செலவே!

(தரவு)

(வரி. 1 - 4) படை பண்ணி - (தலைவர் தம்) ஆயுதங்களைத் துடைத்து, புனையவும் - (அவற்றை) அலங்கரிக்கவும், பா மாண்ட - அகலம் மிகுந்த, பல அணை - ஐந்து அணைகளைக் கொண்ட படுக்கையிலே, புடை பெயர்ந்து- (அவர்) ஒருபக்கமாக ஒதுங்கி, ஒடுங்கவும் - ஒடுங்கிக் கிடக்கவும், புறம் சேர - (நீ அவர்) முதுகைச் சேர்ந்து படுக்க, உயிர்ப்பவும் - (அவர் அது கண்டு, 'ஒரே படுக்கையிலும் பிரிந்துகிடக்கப் பொறாது இங்ஙனம் அணைந்துகிடக்கின்ற இவள் நாம் நாடு இடையிட்டுப் பிரிந்தால் எங்ஙனம் ஆற்றியிருப்பாள்!' என்று நினைத்துப்) பெருமூச்சு விடவும், உடையதை எவன் என்று - (நீ அது கண்டு இவர் தம் மனத்திற்) கொண்ட காரியம் யாதோ என்று எண்ணி, ஊறு அளந்து - (உம் கூட்டத்திற்கு) இடையூறு (வருமென்று) அனுமானித்து, அவர் வயின் - அத் தலைவரிடம், நடை செல்லாய் - (அன்பு கொண்டு செய்யும்) செயல்களைச் செய்யாதவளாய், நனி ஏங்கி நடுங்கல் - (நீ) மிகவும் ஏங்கி நடுங்காதே! நறு நுதால் - நல்ல நெற்றியை யுடையவளே!

உடையதை என்பது திரிசொல். கொல், காண்-அசைகள்.

படைபண்ணிப் புனைதலை,
வேலும் இலங்கிலை துடைப்ப பலகையும்
பீலி சூட்டி மணியணி பவ்வே —(நற்றிணை, 177)

என்பதனால் அறிக.

பள்ளியறையில் தலைவனும் தலைவியும் தனித்தனியாகப் படுத்துறங்குதற்கு இட்ட குறுகிய இரண்டு கட்டில்களை யன்றி, இருவரும் சேரப்படுத்தற்கு அகன்றதொரு கட்டிலும், அதன்மீது மயிர்ச்சேணம், இலவின் பஞ்சு, செம்பஞ்சு, வெண் பஞ்சு, அன்னத் தூவி என்னும் ஐவகை அணைகளின் அடுக்கும் இருத்தலின், 'பாமாண்ட பலவணை' என்றார். 'ஐந்துமூன் றடுத்த செல்வத் தமளி மூன்று' என்றார் சிந்தாமணியிலும் (838)

(தாழிசை)

(வரி. 5 - 8) தொல் எழில் தொலைபு - முன்னைய அழகு கெட்டு, இவள் துயர் உழப்ப - இவள் துன்பத்தால் வருந்தும்படி, துறந்து நீ - (இவளை) நீங்கிப்போய் நீ, வல்வினை - வலிதாகிய காவலினால், வயக்குதல் - (திறை தந்த பகைவர் நாட்டை) விளங்கச் செய்தற்கு, வலித்திமன் - துணிகின்றாய் பெரிதும்! வலிப்பு அளவை - (அங்ஙனம் நீ) துணியும் காலத்தில், நீள் கதிர் அவிர் மதி நிறைவு போல்-நீண்ட கதிர்கள் விளங்குகின்ற சந்திரனது நிறைவு (நாளடைவிற் குறைவது) போல, நிலையாது - நிலை நில்லாமல், நாளினும் நெகிழ்பு ஓடும் நலன் - நாள் தோறும் (தன்னிலை) குலைந்து கெடும் அழகு, உடன் நிலையுமோ - இவளுடன் நிலைபெறுமோ ?

(வரி. 9 - 12) ஆற்றல் நோய் - வலிமையை உடைய (காம) நோய், அட - வருத்தலாலே, இவள் அணி வாட அகன்று நீ - இவள் அழகு கெடும்படி நீங்கி நீ, தோற்றம் சால் - புகழ் மிக்க, தொகு பொருள் - திரண்ட பொருளை(த் தேடுதற்கு) முயறிமன்-முயல்கின்றாய் பெரிதும்! முயல்வு அளவை - (அங்ஙனம் நீ) முயலுங் காலத்தில், நாற்றம் சால்-மணம் மிக்க, நளி பொய்கை அடை-பெருமையை யுடைய பொய்கையை அடைந்துள்ள, முதிர் முகையிற்கு கூற்று - முதிர்ந்த (தாமரை) முகைகளுக்குக் கூறுகளாகிய இதழ்களின், ஊழ் போல்-உதிர்வைப்போல, குறை படூஉம் வாழ் நாளும் - குறைந்து கொண்டே வரும் வாழ்நாளும் நிலையுமோ - (இவளுடன்) நிலை பெறுமோ ?

(வரி. 13 - 16) வகை எழில் - (இவளது) அவயவங்களின் எழிலும், வனப்பு - கட்டழகும், எஞ்ச - குறையும்படி, வரை போக - மலையிடத்துப் போக, வலித்து நீ - துணிந்து நீ, பகை அறு பயம் வினை - பகை அறுதலைப் பயனாக உடைய தொழிலில், முயறிமன் - முயல்கின்றாய் பெரிதும்! முயல்வு அளவை - (அங்ஙனம் நீ) முயலுங் காலத்தில், தகை வண்டு - அழகை உடைய வண்டுகள், புதிது உண்ண - விருந்து உண்ணும்படி, தாது அவிழ் - தேன் (தோன்ற) அலர்கின்ற, தண் போதின் முகை - மெல்லிய போதுகளாகிய அரும்புகள், வாய்த்த - பொருந்திய, தடம் போலும் - தடாகம் (நாள்தோறும் நீர் குறைவது) போலும், இளமையும் - (நாள்தோறும் குறைந்து கொண்டே வருகின்ற) இளமையும், நிலையுமோ - (இவளுடன்) நிலைபெறுமோ ?

எழிலாவது - இது வளர்ந்து தீர்ந்ததன்று; இன்னும் வளரும் என்பதுபோன்று காட்டும் பொலிவு.

போது - பேரரும்பு

தாது - தேன் (பட்டினப்பாலை 152-வரியின் உரையை நோக்குக.)

(தனிச்சொல்)

என - என்று, ஆங்கு - அசை

(சுரிதகம்)

(வரி 18-21) பொருந்தியான் - (தலைவனை) அடைந்தயான், தான் வேட்ட பொருள்வயின் - அவன் விரும்பிய பொருள்பற்றி, நினைந்த சொல் - நினைத்துச் சொன்ன சொற்கள், திருந்திய யாக்கையுள் - (நல்வினையால்) திருந்திய உடம்பிலே, மருத்துவன் ஊட்டிய மருந்து போல் - மருத்துவன் செலுத்திய மருந்து (பயன் தருமாறு) போல, மருந்து ஆகி - (நல்ல) பரிகாரம் ஆகி, மனன் உவப்ப - (நம்) மனம் மகிழும்படி, பெரும் பெயர் மீளி - பெரும் புகழையுடைய தலைவன், பெயர்ந்தனன் செலவு - தவிர்ந்தனன் போக்கை.

பழவினையால் வரும் பிணிகள் மருத்துவன் ஊட்டும் மருந்தால் தீராவாதலின், 'திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய மருந்துபோல்' என்றார்.

இது பாலைத்திணை யாகலின், தலைவன் மீளி எனப்பட்டான்.

காற்றுமழை

Shakespeare—"The Tempest"

அங்கம் 2. களம் 1.

[508-வது பக்கத் தொடர்ச்சி]

ஸபஸ்ட்டியன்:—என்னே இவ் வெற்றுரை இது!—எவ்வகை இயம்புகின்றனை நீ? என் முன்னோன் மகள் ட்யூனிஸிற்கு அரசியா யிருப்பது உண்மையே. அங்ஙனே, நேப்ல்ஸிற்குப் பின்னுரிமையுடையாளும் ஆவாள். இத்தேசங்களுக்கிடையே சற்றே இடமும் உளது. (6)

அன்டோனியா:—'அந்த க்ளாரிபல் எங்ஙனம் எங்களை நேப்ல்ஸிற்கு மீள அளப்பாள்' என இடையுள அந்தத் தூரத்தின் ஒவ்வொரு முழமும் வாய்விட்டுக் கதறுவன போல்கின்றன (2). ட்யூனிஸ்ஸிலேயே இரு (3), ஸபஸ்ட்டியன் கண் விழித்துக் கொள்ளட்டும் (4). இவர்களை இப்பொழுது பற்றிக்கொண்டிருக்கு மிது மரணமே என வைத்துக் கொள். மற்றென், இப்பொழு திருப்பதனினும் இவர் அதிகம் கெட்டிருக்கப்போவதில்லை (5).

(1) உன் தமையனைக் கொன்று அவனது அரசினை நீ கைக்கொள், என்னுங் கருத்தை நேர்முகமாகச் சொல்லக் கூசிக் கூசி அன்டோனியோ விளக்கமில்லாச் சிலவற்றை வளைத்துவளைத்துப் பேசுவதன் பொருளை அறியாதவன்போல் ஸபஸ்ட்டியன் இவ்வாறு வியந்துரைக்கின்றானாயினும் இவனுக்கும் அச்சொற்களின் போக்கு எவ்வகைத்து என்பது ஒருவாறு தெரியவந்திருக்கவேண்டும். எனினும் அவன் வாயினின்றே வெளிப்படையாக வரட்டுமென்று, அன்டோனியோ சொன்ன விடயங்களை எடுத்துக் கூறி, அதன் முடிவு என்னவென்று கேட்கின்றான். நேப்ல்ஸிற்கும்ட்யூனிஸிற்கும் இடையே சிறிது தூரம்இருக்கின்றது. உண்மையே; ஆயினும் அதனால் என்ன! பர்டினண்ட் இறந்தேபோயினான் ஆனால், ட்யூனிஸிற்கு அரசியாயிருக்கும் க்ளாரிபல், அலான்ஸோவிற்குப்பின் நேப்ல்ஸ் அரசின் உரிமையை வந்து ஏற்றுக்கொள்ளமாட்டாளா? என்பது பொருள்.

(2) இத்தனைத் தூரத்தை அவள் எவ்வாறு கடந்து மீள இயலும், என்பது பொருள். அவள் வரமாட்டாள் என்று இடைக்கிடந்த தூரமே மறுக்கின்றது என்கின்றான் அன்டோனியோ.

(3) ட்யூனிஸ்ஸிலேயே இரு, என்று க்ளாரிபல்லுக்குச் சொல்லுவதுபோல் சொல்கின்றான். க்ளாரிபெல் ட்யூனிஸ்

தூங்குகின்ற இவனளவு நன்றாக நேப்ல்ஸை ஆள வல்லவர்கள் இருக்கலாம்; இந்தக் கன்ஸாலோவைப் போன்றே அத்துணை வித்தாரமாகவும் வீணேயும் பிதற்றவல்ல பிரபுக்களும் இருக்கலாம். அத்துணை ஆழ்ந்து கரையும் ஓர் அண்டங்காக்கை யானே செய்யவல்லேன் (6). ஐயோ, யான் தாங்கும் இம்மனத்தை நீயுந்தான் தாங்கலாகாதா (7)! உன்னுடைய முன்னேற்றத்திற்கு என்ன தூக்கம் இது (8)! யான் இயம்புவதை அறிந்துகொள்கின்றாயோ?

ஸபஸ்ட்டியன்:-கொள்கின்றேனென நினைக்கின்றேன்.

அன்டோனியா:—ஆயின், உனது இந் நல்லதிர்ஷ்டத்தை எவ்வாறு எவ்வாறு ஏற்றுக்கொள்கின்றது உன் சித்தம்?

ஸபஸ்ட்டியன்:—உன்னுடன் பிறந்த ப்ராஸ்ப்பீரோவைத் துரத்தி நீ அவன்பதவியைக் கைக்கொண்டதை நினைவுகூர்கின்றேன்.

அன்டோனியா:—ஆம். எனது ஆடைகள் எவ்வளவு நன்றாக என்மீது முன்னிலும் அழகுற அமர்கின்றன பார்; என் தமையனது ஊழியர் அப்பொழுது என் தோழரா யமைந்தனர்; இப்பொழுதோ அன்னார் எனது ஆட்கள் ஆயினர்.

ஸபஸ்ட்டியன்:—மற்று, உன் மனச்சாக்ஷியோ?

அன்டோனியா:—ஏ ஏ! ஐய, எங்கே கிடக்கின்றது அது? குதிகாலின் பித்தவெடியாயின் அது, என்னைச் செருப்பினுள் புகுத்திவைக்கும். மற்று, இந்தத்தெய்வத்தைநான் என் மார்பகத்தே உணர்கின்றேனலேன். (9). எனக்கும் மிலானுக்கும் இடையே நிற்பன இருபது மனச்சாக்ஷிகளாயினும் அவை தாம் இடுக்கண்செய்வதன்முன்னர்க் கரைந்துருக லாகட்டும் (10). இப்போது இவன் போல்வது போன்றே இருந்தனனாயின், தான் கிடக்கும் தரையினும் மிகுந் தகவு யாதுமின்றி இதோ கிடக்கின்றான் நின் தமையன் (11). அன்னவனை, ஏவல்செய் இவ் வெஃகினால், அதன் அங்குலம் ஒரு மூன்று, என்றென்றும் பாயலிற் கிடத்திவிடக் கூடும். நீயும் அன்னவாறே செய்து, இப் பண்டைத் துண்டத்தை, விவேகத்தின் இவ்வுருவத்தை, நமது நடத்தையை இடித்துரைக்கா வண்ணம், நிரந்தரம் தொலையாத இமைமூட இயற்றிவிடலாம். (12). ஏனையோர் அனைவரும் என்றாலோ, பூனை பாலை நக்குவதுபோல் அவர் அலாநெறிக் குறிப்பினை உட்கொள்வார். இந்தநேரத்திற்குரியதென்று நாம் இயம்பும் எந்தக் காரியத்திற்கும் ஏற்றபடி கடிகையை எண்ணுவார் அவர். (13)

ஸபஸ்ட்டியன்:—நின் செய்தியே, அருமை நண்ப, என் பிரமாண மாகட்டும்; நீ மிலானை அடைந்து போன்றே நான் நேப்ல்ஸிற்கு வழிக்கொள்வேன். (14). நின் வாளினை உருவிக்கொள் : நீ செலுத்தும் திறையினின்று ஒரு குத்து உன்னை விடுவிக்கும். (15). அரசனேன் யான் நின்பால் அன்பு கூர்வேன்.

அன்டோனியோ:—ஒருங்கே உருவிக்கொள். எனது கையினை உயர்த்துங்கால், கன்ஸாலோவின்மீது வீழ்த்தற்கு நீயும் அவ்வாறே செய்.

[ஒருபுறம் ஒதுங்கி இருவரும் உரையாடுகின்றனர்.]

விலேயே இருக்கட்டும், நீ உடனே வேண்டியவைகளைச் செய்துகொள்-என்று ஸபஸ்ட்டியனுக்குக் கூறுகின்றான்.

(4) இவர்களை—அலான்ஸோ கன்ஸாலோ முதலியவர்களை.

(5) இப்பொழுது இவர் முற்றிலும் செத்தவர்களே போல் கிடக்கின்றாராதலின், உண்மையிற் செத்தாலும் அதனால் இவர்கள் ஒன்றும் குறைவடைந்ததாகக் கூறுவதற்கில்லை—என்பது பொருள். ஆயினும் அதன் பொருத்தம் அன்டோனியோவின் வாயில் மயக்கத்திற் கிடமாயிருக்கின்றது.

(6) கரைதல் - பேசுதல். ஆழ்ந்த தொண்டையில் பேசுவதன்றி இவன் பேச்சில் பொருளின் ஆழம் ஒன்றுமில்லை. இதனில் அவன் அண்டங் காக்கையை ஒக்கின்றான். அலான்ஸோவையும் கன்ஸாலோவையுங் கொன்றபிறகு நீ அரசனாக, நான் கன்ஸாலோவிற்குப் பதிலாக ஓர் அண்டங்காக்கையைப் பேசப்பழக்கி உனக்குப் பிரபுவாக்கக் கருதுகின்றேன்—என்பது பொருள். அல்லது முதனூலிற் போன்றே இவ்வாக்கியம் மொழிபெயர்ப்பிலும், "கான்ஸாலோ அலான்ஸோவிற்கு இருந்ததுபோல், நானே உனக்குப் பிரபுவாகி, அண்டங்காக்கைபோல் உன் பக்கத்தில் வீணே பிதற்றிக்கொண்டிருப்பேன்' என்றும் பொருள்படலாம்.

(7) என்னைப்போல் நீயும் எண்ணலாகாதா—என்பது பொருள்.

(8) உலகவழக்கில், முன்னேற்றம் அடைய முயல்வதெல்லாம் இப்படி அயர்ந்திருப்பவர்களைச் சிதைத்து அபகரித்துக்கொள்வதே யாகி முடிவதன்றி வேறில்லை என்பதை ஷேக்ஸ்பியர் இங்குக் காட்டுகின்றார். 'ஜூலியஸ் ஸீஸர்' என்னும் நாடகத்தில், விடுதலை சுதந்தரம் அனைய இயக்கங்களின் பொய்ம்மையைக் காட்டினார்.

(9) மனச்சாக்ஷி யாதென்பது அறியேன்; அப்படி ஒன்று இருக்கவும் இயலாது. காலில் பித்தவெடி இருந்தால், உறுத்துவது உணர்ந்து செருப்புப் போட்டுக்கொள்கின்றோம். அங்ஙனம் ஒன்றும் மனதில் உறுத்தக் காண்கிலேன், மற்று என் மனச்சாக்ஷி உண்டென்று வீணே கூசவேண்டும்—என்பது பொருள். மனச்சாக்ஷியை இங்கு அன்டோனியோ, 'தெய்வம்' என்று குறிப்பது பரிகசம்.

(10) மிலான் அரசினை நான் என் தமயனிடத்திலிருந்து அபகரித்துக் கொள்வதற்குமுன் என் மனச்சாக்ஷியொன்றும் இடையூறு செய்யவில்லையே. ஒன்றே அன்றிப் பல மனச்சாக்ஷிகள் இடையே இருந்தாலும், அவைகளை நான் கற்கண்டைப்போல் (அல்லது பனியைப் போல்) கரைத்துவிட்டு என் காரியத்தை முடித்துக்கொள்ள வல்லேன்—என்பது பொருள்.

(11) இவன் போல்வது போன்றே இருந்தனனாயின்.—தூங்குகின்ற இவன் பார்வைக்குச் செத்துக் கிடப்பவன் போலவே தோன்றுகின்றான். இனி, இவன் தோன்றுகின்றபடியே ஆகியும்விடுவானாயின் (அதாவது,இறந்துவிடுவானாயின்)—என்பது பொருள். இவன்-அலான்ஸோ. தான் கிடக்கும் ... கிடக்கின்றான்—இவன் சாவானாயின், இவன் கிடக்கும் மண்ணிற்கும் இவனுக்கும் வேற்றுமை இல்லாமலொழியும், என்பது கருத்து. முதனூலிற் போன்றே இம் மொழிபெயர்ப்பிலும் வாக்கியத்தி னமைப்புத் தெளிவற்றிருக்கின்றது. கரவுடைய நெஞ்சினர்கள் தெளிவுறப் பேசலருமை.

(12) பண்டைத் துண்டம், என்பது கன்ஸாலோவைக் குறிக்கின்றது. வயது முதிர்ந்த முதியோன் என்பது தோன்ற 'பண்டை' என்றும், மூப்பினால் ஒடுங்கிய அவன் உடலைத் 'துண்டம்' என்றும் இகழ்கின்றான்.

விவேகத்தின் உருவம், என்பதும் கன்ஸாலோவைக் குறிக்கின்றது. மிகுந்த அறிவாளி என்று தன்னைக் கருதியிருக்கின்ற இக்கிழவனை நீ குத்திக் கொன்றுவிடு—என்பது பொருள். அவனைக் கொல்லாமல் விட்டோமானால், நாம் செய்கின்ற காரியங்களைப் பழித்து நம்மைக் கடிந்து பேசுவான்; அது அவன் செய்யாவண்ணம் அவனையும் கொல்லல்வேண்டுமென்பது அன்டோனியோ கூறுகின்ற காரணம்.

(13) அரசனையும் கன்ஸாலோவையும் கொல்வது போதும். மற்றவர்களைக் கொல்லவேண்டா. ஏனெனில் அவர் நம் கருத்திற்கு இசைந்து நாம் வேண்டும்படியே நடந்துகொள்வார். பாலைக்கண்ட பூனைபோல் நம் குறிப்பை நாடிக்கொள்வார். பத்துமணிக்கு நாம் ஒரு காரியத்தைச் செய்ய நிச்சயித்தால், கடிகாரம் அடித்தது எட்டே

[பிறருக்குப் புலப்படாமல் ஏரியல் மீண்டும் வருகின்றது.]

ஏரியல்:—என் தலைவன், தனது நண்பனும் நீ படவிருக்கும் இடரினைத் தன் விஞ்சையால் முன்னறிந்து, அவர்களை உயிருடன் இருக்க வைக்க,—இல்லையேல் தான் எண்ணிய காரியம் இறக்குமாதலின்—என்னை அனுப்பியிருக்கின்றான்.

[கன்ஸாலோவின் காதருகு பாடுகின்றது.]

இங்கே நீயோ குறட்டைவிட்டு
யாதும் அறியாய் கிடக்கையிலே
தன்னின் காலந் தான்கொள்ளுங்
கொட்டாக் கண்ணின் சதியேகாண்
நின்றன் உயிர்மேல் இற்றைநாள்
சற்றே நினைவு வைப்பாயேல்
மங்குந் துயிலை உதறிவிட்டே
எழுவாய் எழுவாய் சாக்கிரதை.

அன்டோனியோ:-ஆயின், நாம் கடிதின் முடிப்போம்.

கன்ஸாலோ:—(கண்விழித்து) இப்பொழுது, நல்ல தெய்வங்காள், வேந்தனைக் காமின்! (ஸபஸ்ட்டியனையும் அன்டோனியோவையும் பார்த்து) ஏன், என்னவிது இப்பொழுது! (அலான்ஸோவை அணுகி) ஹோ, எழுந்திரு! (ஸபஸ்ட்டியனையும் அன்டோனியோவையும் நோக்கி) ஏன் உருவிய வாளினராய் நிற்கின்றீர்? இந்தக் கோரத்தோற்றம் எற்றுக்கு? (16).

அலான்ஸோ:—(கண் விழித்து) நிகழ்ந்தது யாது?

ஸபஸ்ட்டியன்:—நின் துயிலினைக் காத்து நாங்கள் இங்கே நின்றிருந்தபோது, இப்பொழுதுதான், ஆழ்ந்ததோர் முக்காரம் வெடிக்கக் கேட்டோம் (17), எருதுகளைப் போல், அல்லது சிங்கங்களைப் போல வென்னலாம் (18). நின்னை அது எழுப்பவில்லையா? என்னுடைய காதினை அது மிக மிக உக்கிரமாய் இடித்தது.

அலான்ஸோ:—நான் கேட்கவில்லையே ஒன்றும்.

அன்டோனியோ:—ஆகா! அரக்கன் செவியினை வெருட்ட வல்லதோர் முழக்கம், பூகம்பம் விளைப்பதற்கு மது போதுமானது! சிங்கத்தின் ஓர் முழுமந்தையின் கர்ச்சனையே யது நிச்சயம் (19).

அலான்ஸோ:—கேட்டனையோ இதனை நீ கன்ஸாலோ?

கன்ஸாலோ:—என் மானத்தின்மீ தாணை, ஐயனே, முரலல் ஒன்று யான் கேட்டேன். அற்புதமாயுமிருந்தது; என்னை எழுப்பியது (19). நின்னைக் குலுக்கினேன், ஐய, கத்தினேன். என் கண்கள் திறந்தபோது இவர் படைக்கலன்கள் உருவியிருக்கக் கண்டேன். இரைச்சல் ஒன்று இருந்தது, அது உண்மையே (20). நாம் தற்காத்து நிற்றலே நலம், அல்லது இந்நிலத்தினை விட்டு நாம் அகல்வதும் நலமாம்: நமது படைகளை உருவிக் கொள்வோம் (21).

அலான்ஸோ:—இந் நிலத்தினின்று நடத்திச் செல். என் ஏழைமைந்தனுக்கு இன்னும் நாம் தேடல் செய்வோம்.

கன்ஸாலோ:—கடவுளே அவனை இவ்விலங்குகளினின்று காக்கட்டும். நிச்சயம், அவன் இத்தீவினில் இருக்கின்றான் (22).

அலான்ஸோ:—நட நீ, தொடர்ந் தகல்வோம்.

[எல்லோரும் போகின்றனர்]

ஏரியல்:—யான் செய்ததை என் தலைவன் ப்ராஸ்ப்பீரோ அறியட்டும். மற்று, வேந்தே, நின் மைந்தனைத் தேட இனிது மேற்செல்க.

போகின்றான்.

யானாலும், பத்தே அடிக்கத் தாம் எண்ணினாரெனக் கூறி நம் கருத்தை நடத்திவைக்க விரைகின்ற பெற்றியோர் இவர்—என்பது பொருள்.

(14) நீ உன் தமையனைப் பெயர்த்து அகற்றி மிலானுக்குத் தலைவனான அந்தச் செய்தியையே பிரமாணமாகக் கொண்டு நானும் என் தமையனைக் கொன்று நேப்ல்ஸிற்கு அரசனாக இசைகின்றேன்—என்பது பொருள்.

(15) என்னுடைய இலாபத்தின்பொருட்டு நீ என் தமையனைக் குத்திக்கொல்வதற்கு ஈடாக, நீ இனித் திறைசெலுத்தாமல் உன்னை விடுவித்து விடுகின்றேன்—என்பது பொருள்.

(16) கோரத்தோற்றம் எற்றுக்கு - ஏன் பேய்போல் கோரமாகத் தோன்றுகின்றீர்.

(17) முக்காரம் - எருது கத்தும் ஒலி. வெடிக்க - திடீரென்று வெடித்ததுபோல் ஒலிக்க.

(18) சொல்வது பொய்யாதலால், எருதின் ஒலிகேட்டு வாளுருவி நிற்றல் ஒல்லாது என்பது உணரவே, எருதுகள் என்றதைச் சிங்கங்கள் என்று மாற்றிக்கொள்கின்றான்.

(19) ஸபஸ்ட்டியன் சொல்லிய எருதின் முழக்கத்தை விட்டுவிட்டு அன்டோனியோ சிங்கமந்தையின் கர்ச்சனையே என்று நிறுவுகின்றான். எருதாகிச் சிங்கமாகிப் பின் சிங்கத்தின் மந்தையாகித் தீருமிதுவே, பொய் வளரும் நெஞ்சினர்கள் நாப்பெருக்கும்வகை ஆவது அவரவர் அனுபவத்தினின்றே அறியக்கிடக்கும் ஓர் உண்மை. இவ்வண்ணம் ஒன்றினை மேல்மேல் நவில நேர்வதெல்லாம் பொய்யே என மதிப்பது பெரும்பாலும் பிழையாகாது.

(20) என் மானத்தின்மீது ஆணை - என்பது, ஓர் ஆங்கில வழக்கு; ஒருவன் தான் சொல்லவருவதை உண்மையென்று கேட்பவர் கொள்ளவேண்டும் என்னும் குறிப்புடையது. ஆணையிட்டு ஒன்றை வற்புறுத்தும் அத்துணை வன்மை இவ்வழக்கிற்கில்லை. முரலல் - வண்டுகள் செய்யும் ரீங்காரம் போன்ற வொலி. ஏரியல் தன் காதில் பாடிய வொலியை இவ்வண்ணம் செப்புகின்றான் கன்ஸாலோ.

(21) ஆயினும் அவ்விரைச்சல் சிங்கத்தின் கர்ச்சனையன்று, என் காதருகு முரன்ற ஒலியே - என்று கன்ஸாலோ தன்னுள்ளே நினைத்து, ஸபஸ்ட்டியனும் அன்டோனியோவும் உருவிய வாளினராய் நின்ற அந்நிலை நேரிதன்றெனவும் கருதியிருப்பான்.

(22) அன்டோனியோவும் ஸபஸ்ட்டியனும் சடுதியில் எதிர்த்தால் தன்னைக் காத்துக்கொள்வதற்குக் கன்ஸாலோ,தான் கொண்ட சங்கையை வெளிப்படுத்தாமலே, வாளை உருவிக்கொள்வதற்குச் செய்ததோர் சூழ்ச்சி யிது.

குறிப்பு:—அன்டோனியோவும் ஸபஸ்ட்டியனும் இத்துணைப் பாதகம் செய்யவல்ல தீயரே என்பதைக் காட்டும் வண்ணம், இக் களத்தின் முதலில் அவ்விருவரும், மகனை இழந்து அரசன் வருந்தும் நிலையையுங் கருதாமல், கன்ஸாலோ முதலியோரை இளிவர இகழ்ந்து பரிகசிக்கும்படி ஷேக்ஸ்ப்பியர் அமைத்தனர்.

அன்டோனியோவுடன் சேர்ந்ததால் ஸபஸ்ட்டியன் கெட்டான் என்று எண்ணலாகாது. ஸபஸ்ட்டியனும் இயற்கையில் கொடியோனே. மிலானிலிருந்து ப்ராஸ்ப்பீரோவைத் துரத்துதற்கு ஸபஸ்ட்டியனும் உடன்பட்டு உதவினான் என்பது பின் வரும் (அங்கம் 3, களம் 3) ஏரியலின் கூற்றால் தெரிகின்றது. ஆதலின் சிற்றினக் கயவர் இருவர் ஒருங்கு சேர்ந்ததால் இந்தச் சதிக்கு இடங்கிடைத்ததே யன்றி, சிற்றினச் சேர்க்கையால் நல்லோன் ஒருவன் தன் இயற்கைதிரிந்து பொல்லாங்கு புரியப் புகுந்த பரிசன்று இது. வள்ளுவர் கருத்து யாவதாயினும், ஷேக்ஸ்ப்பியரோ, தெருண்ட மேலவர் சிறியவரைச் சேர்ந்தால் இயற்கைகெட் டழிவார் என்று நம்பவில்லை. 'ஜூலியஸ் ஸீஸர்' என்னும் நாடகத்தில், ப்ரூட்டஸ் காஸ்ஷியஸ்ஸால் திரிக்கப்பெற்றான் என்றெண்ணுவதற்கு இடமில்லை என்பதற்குரிய காரணங்களைச் சென்றவாண்டு இவ்விதழ்களில் அந்நாடகம் மொழிபெயர்ந்து வந்தபோது வரைந்த குறிப்புரைகளிற் காணலாம். கம்பர் கருத்தும் இன்னதே என்னுந்தன்மை இவ்விதழ்களில் வந்துள (2-வது வால்யூம், 613-வது பக்கம்) கம்பராமாயணக் கட்டுரை யொன்றில் விளக்கப்பெற்றிருக்கின்றது.

முதற்களம் முற்றிற்று.

யாப்பிலக்கணம்

[512-வது பக்கத் தொடர்ச்சி]

விருத்தம்

முந்திய இதழில் விருத்த வகைகளுள் ஒன்றாகிய வெளிவிருத்தத்திற் குரிய இலக்கணத்தைக் கற்றோம்; இவ்விதழில் ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், வஞ்சி விருத்தங்களுக்கு உரிய இலக்கணத்தைக் கற்போம்:

2. **ஆசிரிய விருத்தம்:**—ஒத்த அளவினவாகிய கழிநெடிலடிகள் நான்கு பெற்று வருவன ஆசிரிய விருத்தம் என வழங்கப்படும். அவற்றுள் அடிதோறும் பொருள் முடிந்து அடிமறியாய் வருவன **ஆசிரிய மண்டில விருத்தம்** எனவும், அடிமறியாது நிற்பன **ஆசிரிய நிலை விருத்தம்** எனவும் வழங்கப்படும். அவற்றுள் அறுசீர்முதல் எண்சீர் வரையில் கொண்ட கழிநெடிலடி கொண்டு வருவன சிறப்புடை ஆசிரிய விருத்தமெனவும், எண்சீரின் மிக்க பல சீர்களைக் கொண்ட கழிநெடிலடிகளைக் கொண்டு வருவன சிறப்பில் ஆசிரிய விருத்தமெனவும் வழங்கப்படும். அடிமறியாய் வருவன அடிமறி மண்டில ஆசிரியப்பாவின் இனமாம்; அடிமறியாகாது நிற்பன நிலைமண்டில ஆசிரியப் பாவின் இனமாம் என அறிக.

வரலாறு

ஈட்டுவார் தவம லான்மற்
 றீட்டுறு வியைவ தின்மை
காட்டினர் விதியார் அஃது
 காண்கிற்பார்க் காண்மின் அம்மா
பூட்டுவார் முலைபொ ருத
 பொய்யிடை யையப் பூநீர்
ஆட்டுவார் அமரர் மாதர்
 ஆடுவார் அரக்கர் மாதர்.

(இஃது அறுசீர்க் கழிநெடிலடியான் வந்த சிறப்புடை ஆசிரிய விருத்தம்.)

"ஆயிடை அரக்கன் அரம்பையர் குழுவும்
 அல்லவும் வேறயல் அகல
மேயினன் பெண்ணின் விளக்கெனுந் தகையாள்
 இருந்துழி ஆண்டவள் வெருவிப்
போயின உயிரள் ஆமென நடுங்கிப்
 பொறிவரி எறுழ்வலிப் புகைக்கண்
காய்சின உழுவை தின்னிய வந்த
 கலையிளம் பிணையெனக் கரைந்தாள்."

(இஃது எழுசீர்க் கழிநெடிலடியான் வந்த சிறப்புடை ஆசிரிய விருத்தம்.)

"அருகிவரும் கிளிமொழியால் அமிழ்தந் தோற்றி
 அகன்பொழில்வா யுணப்பரவி அடைந்த மாதர்
கருதியதே கொடுத்துயர்ந்த காட்சி நோக்கிக்
 கற்பகத்தோ டொப்புரைப்பர் சிலர்வாய் வல்லார்
வருதளிரின் நறுமேனி மயிலஞ் சாயல்
 வாணுதலாட் கரிதில்லை யதற்க ணுண்டென்
றொருதலையாய் ஒவ்வாமை உரைப்பர் யானோ
 ஒளியியக்க இருதிறமும் உடன்பட் டேனே."

(இஃது எண்சீர்க் கழிநெடிலடியான் வந்த சிறப்புடை ஆசிரிய விருத்தம்.)

ஆசிரிய மண்டில விருத்தம்

"செங்கயலும் கருவிளையும் செவ்வேலும்
 பொருகணையும் செயிர்க்கும் நாட்டம்;
பங்கயமும் இலவலரும் பனிமுருக்கும்
 பவளமுமே பழிக்கும் செவ்வாய்;
பொங்கரவின் இரும்படமும் புனைதேரும்
 பொலிவழிக்கும் புடைவீங் கல்குல்;
கொங்கிவரும் கருங்கூந்தல் கொடியிடையாள்
 வனமுலையும் கூற்றம் கூற்றம்."

(இஃது அறுசீர்க் கழிநெடிலடியால் அடிமறியாக அமைந்துள்ளமையால், அடிமறி மண்டில ஆசிரிய விருத்தம்.)

"வெறிவிரவு புன்சடைமேல் வெள்ளம் பரக்கும்;
 விறல்விசயன் ஆகத்தும் வெள்ளம் பரக்கும்;
கறைவிரவு நஞ்சுண்டு கண்டங் கறுக்கும்;
 கழலடைந்தார் தீவினையைக் கண்டங் கறுக்கும்;
பொறிவிரவு பூண்முலையாள் போகத்த னுகும்;
 பொதுநீக்கித் தனையடைந்தார் போகத்த னுகும்;
நெறிவிரவு காஞ்சி நெறிக்காரைக் காட்டான்;
 நிழலடைந்தார் தம்மை நெறிக்காரைக் காட்டான்"

(இஃது எண்சீர்க் கழிநெடிலடியான் வந்த அடிமறி மண்டில ஆசிரிய விருத்தம்.)

குறிப்பு:—எண் சீரின் மிக்க பல சீர்களையுடைய கழிநெடிலடியா னமைந்த சிறப்பில் ஆசிரிய விருத்தங்களைக் கலாநிலயத்தின் இவ்வாண்டின் தொகுதியில் மூன்றாம் இதழில் ஐம்பத்தைந்தாம் பக்கத்திற் காண்க.

3. **கலி விருத்தம்:**—அளவடி நான்கு பெற்று வருவன **கலி விருத்தம்** எனப்படும். அவற்றுள் அடிமறியாய் வருவன **கலி மண்டில விருத்தம்** எனவும், அடிமறியாகாது வருவன **கலி நிலை விருத்தம்** எனவும் வழங்கப்படும்.

குறிப்பு:—கலியொலியின் வழுவாது அளவடி நான்கு பெற்று வருவன **தரவு கொச்சகக் கலிப்பா** என்று வழங்கப்படும்.

வரலாறு

கந்தா சரணம் கதிர்வேல் சரணம்
எந்தாய் சரணம் இனியாய் சரணம்
நந்தா தசெழுஞ் சுடரே சரணம்
சிந்தா குலந்தீர் சேயே சரணம்.

(இஃது அடி மறியாய் நிற்றலின் **கலி மண்டில விருத்தம்** என வழங்கப்படும்.)

"செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல் அறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே."

(இஃது அடிமறியாகாது நின்றவாறே நின்று பொருள் தருதலின், **கலி நிலை விருத்தம்** என்று வழங்கப்படும்.)

4. **வஞ்சி விருத்தம்:**—சிந்தடி நான்கு பெற்று வருவது **வஞ்சி விருத்தம்** எனப் பெயர் பெறும். அஃது அடிமறியாய் வரின், **வஞ்சி மண்டில விருத்தம்** எனவும், அடி மறியாகாது வரின், **வஞ்சி நிலை விருத்தம்** எனவும் வழங்கப்படும்.

வரலாறு

"சொல்லல் ஓம்புமின் தோம்நனி;
செல்லல் ஓம்புமின் தீநெறி;
கல்லல் ஓம்புமின் கைதவம்;
மல்லல் ஞாலத்து மாந்தர்காள்."

(இஃது அடிமறியாய் வந்தமையால், **வஞ்சி மண்டில விருத்தம்.**)

அன்ன வன்றனை அன்றிமற்
றென்னை ஆள்பவ ரின்மையால்
கன்னி வள்ளியின் காதலன்
தன்னை எண்ணித் தளர்வனே.

(இஃது அடிமறியாகாது வந்தமையால், **வஞ்சி நிலை விருத்தம்.**

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

5-ம் பத்து, 4-ம் தசகம்

[511-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பாசுரம்

பின்னின்ற காதனோய் நெஞ்சம் பெரிதடுமால்
முன்னின் றிராவூழி கண்புதைய மூடிற்றால்
மன்னின்ற சக்கரத்தெம் மாயவனும் வாரானால்
இந்நின்ற நீளாவி காப்பாரா ரிவ்விடத்தே.

பதவுரை:—முதன் மூன்று அடிகளிலும் இறுதியில் உள்ள 'ஆல்' அசை. பின் நின்ற காதல் நோய் - விட்டு ஒழியாத ஆசைநோய், நெஞ்சம் பெரிது அடும்- மனதை மிகவும் சுடுகின்றது. முன் நின்ற இரா - எதிரே நிற்கும் இரவு, ஊழிகண் புதைய மூடிற்று - ஊழிக்காலமும் கண் அழுந்திப் புதையும்படி மூடியது. மன் நின்ற - நிலைத்து நிற்கின்ற, சக்கரத்து எம் மாயவனும் - சக்கிராயுதத்தை உடைய ஆச்சரிய பூதனான கண்ணனும், வாரான் - வருகின்றான் இல்லை. இந் நின்ற - இங்கே இருக்கின்ற, நீள் ஆவி - நீண்ட என் ஆன்மாவை, இவ்விடத்தே - இந்தக் கால தேச வர்த்தமானத்தில், காப்பார் ஆர் - யார் காப்பார்.

குறிப்பு:—"சக்கரத்து மாயவன்" என்றது—எப்பொழுதும் கோடி சூரியர்கள்போல் ஒளிவீசும் சக்ராயுதத்தைக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ணபகவான் பாரத யுத்தத்தில் சூரியனை மறைத்து இருள் சூழும்படி செய்த ஆச்சரியத்தை நினைத்து உரைத்தபடி. இருளைப் போக்க உதவும் ஒரு பொருளையே இருளைஉண்டாக்க உபயோகித்த ஆச்சரிய சக்தியுள்ள கண்ணனுக்கு, இப்பொழுது அச்சக்ராயுதத்தால் இவ்விருளைப் போக்குவது அருமையோ. திருக் கையில் சக்கரத்தைத் தரித்தால் போதாதோ—எனக் குறைகூறுகின்றாள்.

'என் மாயவன்' என்றது—"குணைர் தாஸிய முபாகதா" என்றபடி, நற்குணத்தாலே பிறரை ஈடுபடுத்துபவன் என்ற பொருள்.

ஆன்மா நித்தியமானது என்பது வேதாந்திகளின் சித்தாந்தம். நித்தியமானதைக் காப்பாற்ற உதவி எதிர்பார்ப்பானேன் என்றால்—அதுவும் இடுக்கண் பட்டுத் துயர்கூராமைக்குக் காப்புவேண்டும் என்பது விருப்பம்.

7-ம் பாசுரம்

கரப்பாரா ரிவ்விடத்துக் கங்கிருளி னுண்டுளியாய்ச்
சேட்பால தூழியாய்ச் செல்கின்ற கங்குல்வாய்த்
தூப்பால வெண்சங்கு சக்கரத்தன் றோன்றானால்
தீப்பால வல்வினையேன் றெய்வங்கா ளென்செய்
 [கேனோ.

பதக்குறிப்புக்கள்:—கங்கு இருளின் நுண்துளியாய்- இருளின் அளவு இவ்வளவுதான் என்று சொல்லும்படி நுண்ணிய துளியாகிப் பெய்வதுபோல். சேண் பாலது - மிக்க தூரத்திலிருந்து வருவது. ஊழியாய்ச் செல்கின்றது - ஊழிபோல வளர்கின்றது. தூப்பால- பரிசுத்தமான. வெண் சங்கு சக்கரத்தன் - சக்கரத்தைத் தரித்திருக்கும் கிருஷ்ணபகவான் வந்தாற்போதுமென்று முன்பாசுரத்தில் சொன்ன ஆழ்வார், இருட்டு விஞ்சியிருப்பதால், ஒளி பரப்பும் வெண்சங்கோடும் வந்து காக்கவேண்டும் என்று இப்பாசுரத்தில் கூறுகின்றார். தெய்வங்காள் - என்றது, இரவிலும் கண்மூடாத தேவதைகளே, நீக்கள், என் தாயாரையும் தோழிமாரையும்போல் தூங்குகின்றவர்கள் அல்லீரே. நீங்களாவது எனக்குத் துணைசெய்ய வாருங்கள் என்று அழைத்தபடி.

8-ம் பாசுரம்

தெய்வங்கா ளென்செய்கே னோரிரவே ழூழியாய்
மெய்வந்து நின்றெனதாவிமெலி விக்கும்
கைவந்த சக்கரத்தென் கண்ணனும் வாரானால்
தைவந்த தண்டென்றல் வெஞ்சுடரிற் றானடுமே.

பதக்குறிப்புக்கள்:—ஓர் இரவு ஏழ் ஊழியாய்-ஒரு இராத்திரிக் காலமே ஏழு ஊழியின் அளவாகி. மெய்- மெய்யாக. கை வந்த - கையில்கொண்ட. தைவந்த - என்னைத் தடவுகின்ற. தண் தென்றல் வெம் சுடரில் தான் அடும்-குளிர்ந்த தென்றற்காற்றானது கொடிய நெருப்பைப்போல் என்னைச் சுடுகின்றது.

9-ம் பாசுரம்

வெஞ்சுடரிற் றானடுமால் வீங்கிருளின் நுண்டுளியாய்
அஞ்சுடர வெய்யோ னணிநெடுந்தேர் தோன்றாதால்
செஞ்சுடர்த் தாமரைக்கண் செல்வனும் வாரானால்
நெஞ்சிடர்தீர்ப் பாரினியார் நின்றுருகு கின்றேனே.

பதக்குறிப்புக்கள்:—வீங்கு இருள்-மிகுகின்ற இருட்டு. அம் சுடர வெய்யோன் - அழகிய ஜோதியை உடைய சூரியன்.

குறிப்பு:—வெகு தூரத்திலிருந்து துளித்துளியாய் வந்து இருள் இப்படி அடரக்கூடுமானால், சூரியன் தன் ஒளியை அதற்குள் செலுத்தி ஓட்ட முடியாதோ என்பது கருத்து.

10-ம் பாசுரம்

நின்றுருகு கின்றேனே போலநெடு வானம் [வாய்
சென்றுருகி நுண்துளியாய்ச் செல்கின்ற கங்குல்
அன்றொருகால் வைய மளந்தபிரான் வாராவென்
றொன்றொருகால் சொல்லா துலகோ வுறங்குமே.

பொழிப்புரை:—இடைவிடாமல் உருகி அழுகின்ற என்னைப் போல, வானமும் உருகி நுண்ணிய துளியாய் விழுவதை ஒக்கும் இந்த இரவின் இருளில், அன்று ஒரு சமயம் உலகத்தை அளந்த பிரான் வரான் என்றுகூட ஒருதரம் சொல்லாமல் இவ்வுலகம் உறங்குகின்றதே.

குறிப்பு:—எனக்கு ஆறுதல்கூற உதவாமல் தாய்மாரும் தோழிமாரும் தூங்கிவிட்டனர். கண் கொட்டாத தேவதைகளுங்கூட எனக்கு எதிர்மாற்றங் கூற வரவில்லை. திருவிக்கிரமாவதாரம் எடுத்து உலகத்தை அளந்தவன் வருவானோ என்று கேட்டால், (வருவான் என்று உறுதி சொல்லாமற்போனாலும்) வரமாட்டான்' என்றுகூடப் பதில் சொல்வதற்கு ஒருவரும் இல்லாமல் என்னை நிராதரவாய் விட்டுவிட்டு இவ்வுலகத்தவர் அனைவரும் உறங்கிக் கிடக்கின்றார்களே—என்று வருந்துகின்றார்.

"வரமாட்டான்" என்றாலுங்கூட அச்சொற்கள் பகவத் விஷயமாதலால், அதுவே தற்காலம் தமக்கு ஆறுதல் அளிக்கும் என்பது, திருவுள்ளம்.

11-ம் பாசுரம்

உறங்கு வான்போல் யோகுசெய்த பெருமானைச்
சிறந்தபொழில் சூழ்குருகூர்ச் சடகோ பன்சொல்
நிறங்கிளர்ந்த வந்தாதி யாயிரத்து ளிப்பத்தால்
இறந்துபோய் வைகுந்தம் சேராவா றெங்ஙனேயோ.

குறிப்பு: - உறங்குவான்......பெருமான் - ஸவாத்மாநுபவ ஜநிதநிரவதிகானந்த மகிமையின் பிரஸக்தியாலே திருவுள்ளம் தெரிந்து அலைகளாடாச் சமுத்திரம்போல் நிச்சலனமான யோகம் செய்பவன்போல் இருக்கும் எம்பெருமான். இறந்துபோய்......எங்ஙனேயோ-சரீரம் விட்டு அரச்சராதிகதி வழியாய்ப் போய்ப் பரமபத ப்ராப்தி தப்புவது எப்படி.

பாரத யுத்தத்திற்குக் கிருஷ்ணனுடைய துணைவேண்டித் துரியோதனனும் அர்ச்சுனனும் ஓரேசமயத்தில் போய்ச் சேர்ந்தனர். அப்பொழுது பகவான் யோகு புரிபவன்போல் மஞ்சத்தில் சயனங்கொண்டிருந்தனன். கண்விழித்தபின் அவர் வந்துள காரியத்தைக் கேட்டறிந்து, "ஆயுதம் எடுக்கமாட்டேன், யார் பக்கம் வேண்டுமானாலும் சேர்கின்றேன்" என்ன, ஆயுதம் ஒன்றும் எடானாயின் கிருஷ்ணனால் யுத்தத்தில் தனக்கு என்ன பயனென்று துரியோதனன் போய் விட்டான். பிறகு "நீர் என்ன யோகத்தில் அமர்ந்திருந்தீர்" என்று அர்ஜுனன் வினவ, 'லோகரக்ஷணார்த்தம் யோகம் செய்தேன்' என்று கண்ணன் பதில் அளித்தான்.

தமிழ்ப் பாடம் 77.

அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை

[514-வது பக்கத் தொடர்ச்சி]

மாலைக்கோ லித்திரியும் வையகத்தோர் தம்பிறவி
வேலைக்கோர் வங்கமாம் வேங்கடமே—சோலைத்
தருமா தரைநட்டான் றண்முல்லை யாயர்
தருமா தரைநட்டான் சார்பு 3.

பதப்பிரிவு:—மாலை கோலி திரியும் வையகத்தோர் தம் பிறவி வேலைக்கு ஓர் வங்கம் ஆம் வேங்கடமே சோலை தரு மா தரை நட்டான் தண் முல்லை ஆயர் தரு மாதரை நட்டான் சார்பு.

பதவுரை:—மாலை - மயக்கத்தால் வரும் ஆசையை, கோலி - சூழ்ந்துகொண்டு, திரியும் - அலைகின்ற, வையகத்தோர்தம்-பூலோகத்தவர்களுடைய, பிறவி - பிறவியாகிய, வேலைக்கு - கடலுக்கு, ஓர்-ஒரு, வங்கம் ஆம் - மரக்கலம்போன்ற, வேங்கடமே - திருவேங்கட மலைதான்,

சோலை-இந்திரன் சோலையிலுள்ள, தரு - பாரிஜாத மரத்தை, மா - பெரிய, தரை - பூமியில், நட்டான் - (சத்தியபாமாவிற்காகக் கொணர்ந்து) நட்டவனும், தண் - குளிர்ச்சியான, முல்லை - முல்லை நிலத்திலுள்ள, ஆயர் - இடையர்கள், தரு - பெற்ற, மாதரை-பெண்களை, நட்டான் - விரும்பினவனும், ஆகிய திருமால், சார்பு - சார்ந்திருக்கும் இடம்.

கருத்து:—ஆசையால் வரும் மயக்கங்களி லகப்பட்டுச் சம்சாரம் என்னும் கடலில் அல்லல்படும் ஜனங்கள் திருவேங்கடமலையில் எழுந்தருளியுள்ள திருமாலைத் தரிசித்தமாத்திரத்தில் துன்பத்தினின்று கரையேறுவார் என்பது, இச்செய்யுளின் பொருள்.

விரிவுரை:—ஒன்றைப்போல் மற்றொன்று இருக்கின்றதெனச் சொல்லி, சொல்லவரும் பொருளை அழகுறப் புனைந்து அமைப்பது உவமையணி. இப்படி உரைப்பதற்கு ஏதுவாய் அவ்விரு பொருள்களுக்கும் பொதுவான ஒற்றுமை இருத்தல்வேண்டும். இவ்வொற்றுமை, நிறம் வடிவு அளவு சுவை முதலிய பண்புகளாலேனும், அல்லது தொழிலினாலேனும், அல்லது பயனாலேனும் ஏற்படலாம். முதல் செய்யுளில் திருவேங்கடமலைக்குப் பார்மகள் மகுடத்தையும், இரண்டாவது செய்யுளில் பூமிதேவியினுடைய கொங்கையையும் உவமைப்படுத்தியது, வடிவுபற்றி வந்த பண்புஉவமை. இந்தச் செய்யுளில் திருவேங்கடமலை வங்கத்திற்கு நிகராகச் சொல்லப்பட்டது. இம்மலை மரக்கலம்போ லிருப்பது (மகுடமும் முலையும்போல்) வடிவினாலன்று. ஆகையால் இது வடிவு பற்றி வந்த உவமை ஆகாது. மரக்கலத்தில் ஏறினால் எப்படி அது கடலைக்கடந்து கரை சேர்ப்பதாகிய தொழிலைச் செய்யுமோ, அப்படியே வேங்கடத்தில் ஏறினால் இதுவும் பிறவிக்கடல் கடந்து முத்தியைச் சேர்க்கும் என்ற கருத்தில் இவ்வுவமை வந்திருக்கின்றது. அதாவது, கரைசேர்க்கின்றதென்னும் தொழில் இவ்விரண்டிற்கும் உள்ள பொதுத்தன்மை. ஆகையால் இது தொழில்பற்றி வந்த உவமையாம்.

பின்னிரண்டடியில், யமகம் என்னும் சொல்லணி இருக்கின்றது. 'தருமாதரை நட்டான்' என்று மூன்றும் அடியில் வந்திருக்கின்ற எழுத்துக்களை மீண்டும் நான்காமடியிலும் வந்திருப்பதால் யமகம் என்கின்றோம். முன்னிரண்டு பாட்டுக்களின் பின்னிரண்டடிகள் முதலெழுத்துமாத்திரம் வேறாயிருந்ததைக் கவனித்திருப்பீர்; ஆகையால் அது திரிபு. முதலெழுத்து உள்பட பல எழுத்துக்கள் ஒன்றாகவே அடிகளில் நடந்துஅர்த்தம்மாத்திரம் வேறுபடுமானால் அது யமகம் என்னும் சொல்லணி. மூன்றாவது அடியில் அவ்வெழுத்துக்கள் தரு மா தரை நட்டான், என்னுஞ் சொற்களாகப் பிரியும். தரு வென்பது மரம் என்னும் பொருளுடைய பெயர்ச்சொல். தருவை நட்டான் என்று ஆகுமாதலால் அது இரண்டாம்வேற்றுமைத் தொகை. தரை என்பதும் பெயர்ச்சொல், ஏழாம் வேற்றுமைத் தொகை. நட்டான், என்பது நடுதலாகிய காரியத்தைச்செய்தவன்என்னும் பொருளுடைய வினையாலணையும் பெயர். 'விருக்ஷத்தைப் பெரிய பூவுலகத்தில் நட்டவன்' என்று பொருள்தரும் சொற்களாகப் பிரியவல்ல இந்த வெழுத்துக்களை நான்காவது அடியில், 'தரு மாதரை நட்டான்' என வேறு சொற்களாகச் சேர்ந்து 'பெற்ற பெண்களை விரும்பினவன்' என்ற பொருளைத்தந்து நிற்கின்றன. முன் அடியில், தரு என்பது பெயர்ச்சொல், இந்த அடியில் 'தரு மாதர்' என்பது வினைத்தொகை. முன், மா தரை எனப்பிரிந்த எழுத்துக்கள் இங்கு மாதரை, என இரண்டாம்வேற்றுமை உருபு விரிந்த பெயர்ச்சொல்லாகி ஒன்றாய்ச் சேர்ந்தன. நட்டான் என்பது இங்கும் வினையாலணையும் பெயராயினும், 'நட்புக்கொண்டவன்' என்ற பொருளை உடையதாயிற்று.

குறிப்பு.—வேலைக்கு வங்கம், என்பதில் வேலை என்னும் பெயர்ச்சொல் நான்காம்வேற்றுமை அடைந்திருக்கின்றது. கொடை பகை நேர்ச்சி தகுதி அதுவாதல் பொருட்டு முறை,என்று நான்காம் வேற்றுமைக்குரிய எழுவகைப் பொருள்களில், விளக்கிற்கு எண்ணெய், என்பதுபோல் கடலுக்குக் கப்பல் என்பதும் நேர்ச்சிப் பொருளது. அல்லது, நோய்க்கு மருந்து என்பதைப் பகைப்பொருள் என்பதுபோல், கடக்கவேண்டிய கடலைக் கடந்து தீர்ப்பதற்கு வேண்டியதாயிருப்பதால் 'வேலைக்கு வங்கம்' என வந்திருக்கும் நான்காம்வேற்றுமை இந்த இடத்தில் பகைப்பொருளைக் குறிக்கின்றது என்றும் சொல்லலாம்.

வள்ளிபுணர்ந் தாறுமுக மன்னிமயின் மேற்கொளலால்[த்
வெள்ளிலைவேல் வேள்போலும் வேங்கடமே-யுள்ளினரை
தங்கமலப் பார்வையான் றன்னடியார் மேல்வைக்குஞ்
செங்கமலப் பார்வையான் சேர்வு. 4

பதப்பிரிவு:-வள்ளி புணர்ந்து ஆறு முகம் மன்னி, மயின்மேல் கொளலால் வெள் இலை வேல் வேள் போலும் வேங்கடமே உள்ளினரை தங்க மல பார்வையான் தன் அடியார்மேல் வைக்கும் செம் கமலம் பார்வையான் சேர்வு.

பதவுரை:—வள்ளி - வள்ளியம்மையோடு, புணர்ந்து - சேர்ந்து, ஆறு - ஆறு, முகம் - முகங்கள், மன்னி - பொருந்தி, மயில்மேல் - மயிலின்மேல், கொளலால் - ஏறுவதால்; வெள் - வெண்மையான, இலை - இலையையுடைய, வேல் - வேலை ஏந்திய, வேள் போலும் - முருகக்கடவுளைப்போன்ற, வேங்கடமே- திருவேங்கடந்தான்,

உள்ளினரை - தன்னை நினைத்தவர்களை, தங்கு - தங்கிய, மலம் - காமம் முதலிய மலங்கள் நிறைந்த, பார் - பூமியில், வைபான் - வைக்காமல் தன்னிடம் சேர்த்துக்கொள்பவனும்,

தன் - தன்னுடைய, அடியார்மேல் - பக்தர்களிடத்தில், வைக்கும் - வைக்கின்ற, செம் - சிவந்த, கமலம்- தாமரை போன்று, பார்வையான் - கண்களையுடையவனும் ஆகிய திருமால், சேர்வு - சேர்ந்திருக்கின்ற இடம்.

விளக்கம்:—முருகக் கடவுளைப் போன்றது திருவேங்கடமலை என்று இச்செய்யுள் கூறுகின்றது. இந்த உவமை, வடிவம் நிறம் அளவு சுவை முதலிய பண்பையேனும், தொழிலையேனும், பயனையேனும் பற்றி வந்திருக்கவில்லை என்பது எளிதில் விளங்கும். மற்று, கவி இங்குச் சிலேடையினால் முருகனுக்கும் மலைக்கும் ஒற்றுமை ஒன்று கற்பித்திருக்கின்றார். ஓரேசொல்லேனும் தொடரேனும் பல பொருள்களுக்குப் பொருத்தம் ஆகும்படி அமைப்பது சிலேடை என்னும் அணி. இந்தச் செய்யுளின் முதலடியில் வந்திருக்கின்ற சொற்கள்,ஒருவித அர்த்தத்தில் முருகக் கடவுளுக்கும் வேறொரு அர்த்தத்தில் திருவேங்கட மலைக்கும் பொருந்தக்கூடியவைகளா யிருக்கின்றன. வள்ளி என்பது,வள்ளிநாயகிக்கும் ஆகும்; வள்ளிக் கொடிக்கும் ஆகும். ஆதலின் 'வள்ளிபுணர்ந்து' என்ற சொற்கள், முருகவேளைக் குறிக்கும்போது 'வள்ளி நாயகியை மணந்து' என்ற அர்த்தமும்,மலையைக் குறிக்கும்போது 'வள்ளிக்கொடியோடு சேர்ந்து' என்ற அர்த்தமும் கொடுத்து, இவ்விதச் சிலேடை யுக்தியால் மலைக்கும் முருகனுக்கும் பொதுமை காட்டுகின்றன. அப்படியே,'ஆறுமுகம் மன்னி' என்பதும் சிலேடை. ஆறு, என்பதற்கு ஐந்தும் ஒன்றும் சேர்ந்த எண்ணைக் குறிக்கும் பொருள் ஒன்றும், நதி என்ற மற்றொரு பொருளும் இருக்கின்றன. முகம், என்பதற்கு முகமாகிய உறுப்பு என்பதொரு பொருள்; போர்முகம், என்பதுபோல் இடத்தைக் குறிக்கின்ற பொருள் மற்றது. ஆதலால், ஆறுமுகம் மன்னி, என்பது 'ஆறுமுகங்கள் பொருந்தி' என்று முருகவேளையும், 'நதிகளைத் தன்னிடத்தில் பொருந்தப் பெற்று' என்று மலையையும் ஒருங்கே குறிக்கும். இனி, மயில்மேல் கொள்வது, குமரக்கடவுளைக் குறிக்கும்போது, மயிலின்மேல் வாகனமாக ஏறிக் கொள்வதும், மலையைக் குறிக்கும்போது மயில்கள் அதன்மேல் இருப்பது மாகும்.

விரிவுரை:-எனவே, வள்ளி புணர்ந்து ஆறுமுகம் மன்னி மயின்மேல் கொண்டது, முருகவேளிற்கும் மலைக்கும், அர்த்தம் வேறுவேறாயினும் சொல்லளவில் ஒக்கும். இவ்விதம் சிலேடையின் உதவியால் ஒரு பொருளை மற்றொரு பொருளிற்குஉவமையாக்கினால், அதனைச் சிலேடைபற்றி வந்த உவமை யென்பர். இச்செய்யுளிற்கு முன், மூன்று செய்யுள்களில் திருவேங்கடமலைக்கு, பிரம்மனையும், சிவனையும், இந்திரனையும் சிலேடை வாயிலாகக் கவி உவமை கூறியிருக்கின்றார். அந்தச் செய்யுள்களை நாம் பாடத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை.

புள்ளரவ நீரரவம் போர்மா வரவமறு
வெள்ளரவ வெற்பாகும் வேங்கடமே-யொள்ளரியாய்
மாகனகம் பத்தினர் வாய்கண்கை யுந்திபதங்
கோகனகம் பத்தினர் குன்று. 5

பதப்பிரிவு:—புள் அரவம் நீர் அரவம் போர் மா அரவம் அறு வெள் அரவம்வெற்புஆகும் வேங்கடமே ஒள் அரி ஆய் மா கன கம்பத்தினர் வாய் கண் கை உந்தி பதம் கோகனகம் பத்தினர் குன்று.

பதவுரை:—புள் - பறவைகளினுடைய, அரவம் - ஒலியும், நீர் - நீர் அருவிகளின், அரவம் - ஒலியும்; போர்-போர்செய்கின்ற, மா-விலங்குகளின், அரவம்- ஒலியும், அறு-நீங்காத, வெள்-தூய்மையான, அரவ வெற்பு - பாம்புமலை, ஆகும் - ஆகும், வேங்கடமே - வேங்கடந்தான்,

ஒள்-பிரகாசம்பொருந்திய, அரி - சிங்கம், ஆய் - ஆகி, மா - பெரிய, கன - பருத்த, கம்பத்தினர் - தூணில் தோன்றியவரும்,

வாய்-வாயும், கண்-கண்கள் இரண்டும், கை-கைகள் நான்கும், உந்தி - கொப்பூழும், பதம் - பாதங்கள் இரண்டும் ஆக, கோகனகம் - தாமரைமலர்கள், பத்தினர் - பத்து உடையவரும், ஆன திருமாலுக்குரிய, குன்று - மலையாகும்.

விரிவுரை:--ஆதிசேஷனே திருவேங்கடமலையாகப் பெருமாளுக்கு அமைந்திருக்கின்ற தாதலால், அம்மலையைச் சேஷகிரி என்றும், சேஷாசலம் என்றும் அழைப்பர். (சேஷன் - பாம்பு, கிரி - மலை; அல்லது சேஷன் - பாம்பு; அசலம் - மலை). இனி, பாம்பு என்

றாலும் அரவம் என்றாலும் ஒரே அர்த்தந்தான்; அவ்வாறே, மலை என்றாலும் வெற்பு என்றாலும் ஒரே அர்த்தம். ஆகையால் சேஷாசலம் என்பதற்கு 'அரவ வெற்பு' என்பது நேர்த்தமிழாகும். எனவே,வேங்கடமலைக்கு 'அரவவெற்பு' எனப் பெயராயிற்று. ஆனால், அரவவெற்பு என்று பேர் வந்ததற்குக் கவி சாமர்த்தியமாய் இங்கு வேறொரு காரணம் கற்பிக்கின்றார். அரவம், என்றால் சப்தம் அல்லது ஒலி என்ற இன்னொரு அர்த்தம் இருக்கின்றது. பறவைகளும் அருவிகளும் விலங்குகளும் செய்கின்ற அரவம் எப்பொழுதும் இம்மலைமேல் நீங்காமல் இருப்பதால், இதனை அரவவெற்பு (அரவத்தை உடைய மலை) என்று அழைக்கத்தகும் என்று காட்டுகின்றார். அரவம், என்பதற்குப் பாம்பு என்னும்பொருளில்அம்மலைக்கு அரவவெற்பு என்ற பெயர் வந்திருக்க, ஒலி என்ற பொருளிலேயும் அப்பெயரின் பொருத்தத்தைக் காட்டுகின்றதனால் இது பிறிநிலை நவிற்சியணி யெனப்படும். "பிரம்மனே, நீ இக்காலத்தில் நல்லவரைப் படைக்கின்றதில்லை என்று எல்லாரும் உன்னைப் பழிக்கின்றனர். ஆதலாற்றான் உனக்கு 'அலரவன்' என்ற பெயர் வந்தது" என்பது இப் பிறிநிலை நவிற்சியணியேயாம். அலர்மேல் (தாமரையின்மேல்) இருப்பதால் பிரம்மனுக்கு 'அலரவன்' என்ற பேர் வந்திருக்க, அலர், என்ற பதத்திற்குப் பழிச்சொல் என்றிருக்கும் மற்றொரு அர்த்தத்தை ஒட்டி அவ் வலரவன் (பழிச்சொற்களுக்குப் பாத்திரமானவன்) என்ற பெயர் பிரம்மனுக்கு வந்ததாகக் காரணம் கற்பிக்கப்பட்டிருக்கின்றது.

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[515-வது பக்கத் தொடர்ச்சி]

1545 பதலை யுடுக்கு மொருகட் பறையும்
தாழியு மலையுஞ் சாற்றினர் புலவர்.
1546 பதுக்கை சிறுதிட்டையும் பரலுந் தூறும்
பாறையு மெனவே பகர்ந்தனர் புலவர்.
1547 பதங்கம் விட்டிலும் பறவைகளு மாகும்.
1548 பதம்பல் சிறப்பும் வழியும் பொதுவுஞ்
சோறு முணவுஞ் சொல்லும் பாதமும்
ஈரமுஞ் சேமமுங் காலமுந் தூசும்
இன்பமுஞ் செவ்வியுங் குழைவும் விழாவும்
அமைதலும் பாவின் பதமும் பதமும்.
1549 பதவி மேலாம் பதமும் வளமும்.
1550 பத்திரி காளியு மம்பு மிலையுங்
குதிரை யும்புட் பொதுவுங் கூறும்.
1551 பத்தி வழிபாடு மொழுக்கமு முறையும்
அடைப்பு மெனவே யறைந்தனர் புலவர்.
1552 பதிமூத் தோரு மன்னனும் பரமனுங்
குதிரையு மூருங் கணவனுஞ் செல்வனும்
பிறையு[ம்] பரவலும் பதித்தலு மாகும்.
1553 பத்திரம் வனப்பு நன்மையும் படையுஞ்
சிங்கா சனமு மிலையுஞ் சிறகும்
அத்திர மும்மென வறைந்தனர் புலவர்.
1554 பதணம் யானையு மரணு மாகும்.
1555 பதாகை கேதனமும் வல்லியும் பகரும்.
1556 பந்தங்கை விளக்கு மழகுங் கிளையும்
உண்டையுங் கட்டுப் பாடுந் தளையும்
பாசமு மிலையும் பகர்ந்தனர் புலவர்.
1557 பந்து கந்துகமு நீர்தூங் குருத்தியும்
கட்டும் பந்துங் கழறினர் புலவர்.
1558 பப்புப் பரப்பு மொப்பும் பகரும்.
1559 பம்பர மாடு பம்பரமு மேருவும்.
1560 பம்ப லெழுச்சியும் பொன்னும் பொலிவும்
துன்னலும் வலியுந் தொடர்தலு மாகும்.
1561 பயஞ்சுதை நீரும் பாலும் பயனும்
படையு மச்சமும் பொன்னுங் குளமும்.
1562 பயிர்விதந்து கட்டிய வழக்கும் பைங்கூழும்
ஒலியும் பயிலும் விலங்கி னொலியும்
பசும்பு லும்புள் ளொலியும் பகர்வர்.
1563 பயம்பு பள்ளமும் யானைவீழ் குழியும்.
1564 பயோதர முலையும் புயலுங் கடலும்.
1565 பயல் சிற்றாளும் பள்ளமும் பாதியும்.
1566 பரவை கடலும் திருமக ளாடலும்
பரப்பு மெனவே பகர்ந்தனர் புலவர்.
1567 பரித லறுத்தலு மிரங்கலு மன்பும்.
1568 பரம்பரிக் கல்லணையுங் கவசமும் பாரமும்
தேகமு மேலு மத்தியு முன்பும்.
1569 பராகம் நாவாயு மலரின் றாளும்
வாணியு மிரேணுவு மெனவழங் கினரே.
1570 பராக்கிரமம் வலியும் வீரமு மாகும்.
1571 பரிபாது காத்தலும் வருத்தமுங் குதிரையும்.
பருத்தியுஞ் செலவுஞ் சுமத்தலு வேகமும்
விரைவும் பெருமையுங் காழ்த்தலு மிகுதியும்.
1572 பரிகங் கிடங்கு மேடையுங் கணையமும்
மதிலு மெனவே வழங்கினர் புலவர்.
1573 பருவரல் துக்கமும் பொழுதுஞ் சுமெரமும்.
1574 பரிதி யாதித்தனும் பொன்னு மொளியும்
சக்கர மும்பரி வேடமும் வட்டமும்.
1575 பருமமுயர்ச்சியு மேகலையும் பரியும்
தூசு மொழியும் பரிமேற் கலணையும்
சானமுங் கவசமுஞ் சாற்ற லாகும்.
1576 பரப்புக் கடலும் பரப்பு மாகும்.
1577 பரசு மூங்கிலு மழுவு மாகும்.
1578 பருப்பு மின்னும் பருப்பு மாகும்.
1579 பரிவு துன்பமு மின்பமு மன்பும்.
1580 பரதர் நுளையரும் வணிகரு மாகும்.
1581 பரத்தல் தொழலும் பரத்தலு மாகும்.
1582 பரணி மருந்துச் செப்பும் பரணியும்.
1583 பரித்த லறுத்தலுந் தாங்கலு மாகும்.
1584 பரதம் பரதமு நடனமு மாகும்.
1585 பலமே சேனையுங் கிழங்கும் பயனும்
காயு நிறையும் பழமு மாகும்.
1586 பலிவெண் ணீறுஞ் சோறும் பூசையும்
[1]பிச்சையும் பலித்தலுந் தாருவுங் காகமும்
தேவுண வுமெனச் செப்பினர் புலவர்.
1587 பலிதம் காய்த்தருவும் நரையு மாகும்.
1588 பலாசு பச்சை நிறமு [2]மிலையும்
பலாசு மரமும் பகர்ந்தனர் புலவர்.

(பிரதி) 1. மீட்சையும். 2. மலையும்.

1589 பல்லியம் வாச்சியமுங் குதிரைப் பந்தியும்
தொங்கலும் பாணியு மென்பாலு மாகும்.
1590 பல்லமோர் கணக்கும் பாணமுங் கரடியும்
பரிமாவின் கலணையும் பகர லாகும்.
1591 பவமே பாவமுந் தோற்றமு மாகும்.
1592 பவித்திரம் தருப்பையுஞ் சுசியு மாகும்.
1593 பவனஞ் சுவர்க்கமு நாடும் பொழுதும்
கோயிலும் மனையும் பூமியுங் காற்றும்
இராசி யுமென வியம்ப லாகும்.
1594 பழமை முதுமையும் வேண்டற் பாடும்
யானையு மெனவே யியம்பினர் புலவர்.
1595 பழங்கண் ஒலியும் புன்கணும் பழுதும்
பயனின்மையு மாசும் பகர லாகும்.
1596 பழுது நிறைவும் பழுது மிடமும்.
1597 பள்ளி சிற்றூருங் கோயிலும் பாயலும்
பகைவ ரிடமும் துயிலிடமு மாகும்.
1598 பளிங்கு பார்க்கவனும் பளிங்கு மாகும்.
1599 பறவை யிரவுண் டியும் பறவையு மிறகும்
பொழுது மெனவே புகன்றனர் புலவர்.
1600 பறம்பு வெற்பு முலையு மாகும்.
1601 பற்றல் தொடலும் வளைதலும் பிணித்தலும்.
1602 பறை வாச்சியமும் வார்த்தையு மிறகும்.
1603 பன்னல் தேர்தலும் நெருக்கமும் பருத்தியும்
பேச்சு மெனவே பேசினர் புலவர்.
1604 பனிசந் திரனுங் குளிரு மச்சமும்
பனியுந் துன்பமு நடுக்கமு மாகும்.
1605 பனையனுட நாளும் பனையு மாகும்.
1606 பனுவல் வார்த்தையுஞ் செய்யுளு நூலும்.

மலர்வனம்

இன்னாதது மினிதாமே.

மைந்தர்க்கும் மாதரார்க்கும் மனமென்பது ஒன்றேயோ, மற்று வேறுபட்ட தன்மைத்தோ என்று ஐயுற்றார் கம்பர் ஒருகால். இவ்வையத்தின் அமைதியை, வள்ளுவர் ஓரிடத்தும், கபிலர் ஓரிடத்தும் கூறிய கொள்கைகொண்டு உய்த்துணர நண்பர்காள், எம்மோடின் றினிது வம்மின்.

புதுமண மதுவின் தேறல் ஒக்குவுண்டு அகமகிழும் ஓர் தலைவன் தன் பாங்கனை நோக்கி,

தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு

[தாம் விரும்பிய மகளிர் தோளின்கண் துயிலும் துயில் போல வருந்தாமல் எய்தலாமோ, அவற்றைத் துறந்த தவயோகிகள் எய்தும் செங்கண்மால் உலகம்]

என்று 'காமத்துப் பாலினுள்' கேட்கின்றான். அகப்பொருளேனும் அறிவின் ஆண்மையால் ஆய்கின்ற இவன், துறக்கநாட் டின்பத்தை உயர்ந்ததென்று உள்ளிப் பின், வருந்தியல்லது அது எய்துதற்கியலாமையின் அவ்வின்பத்தை மறுத்தும் விடுகின்றனன். துன்பத்தால் இன்பந் துய்க்குமாறு அறியகில்லான் இவன்.

கபிலரோ மற்றென் காட்டுகின்றார்—வரைவு நீட்டித்த தலைமகனை இயற்பழித்துரைத்த தோழிக்கு இயற்பட மொழியும் ஒரு நங்கை,

கறிவளர் அடுக்கத் தாங்கண் முறியருந்து
குரங்கொருங் கிருக்கும் பெருங்கன் னாடன்
இனிய னாக லினினத் தியன்ற
இன்னா மையினு மினிதோ
இனிதெனப் படூஉம் புத்தே ளுடே

—குறுந்தொகை. 228.

[மிளகுக் கொடிகள் வளர்ந்துள்ள மலைச்சாரலில், கரிப்பு மிக்க மிளகைத் தின்னாமல், தளிர்களைத் தின்னும் குரங்குகள் கூடியிருக்கும் பெரிய மலைநாடன் நமக்கு மிகவும் இனியனே. ஆதலின், இவன் வரையாதலால் நமக்கு வரும் பழியாலும் பருவரலாலும் நாம் படுந் துன்பத்திலும், இனியதென்று சொல்லப்படும் தேவருலகத்து இன்பம் இனியதென்று ஆகுமோ]

என வினவியசொல் லொரு சொல்லன்றே.தொடர்வதில் துன்பமுளதாயின் பின் எய்தும் இன்பமும் வேண்டாவென மறுத்தது, முப்பாலில் முயங்கிய அவ்வாண்டகையின் அறிவு. இத்துணை இன்பம் இலதாதலின், "இனிது கொல்தாமரைக் கண்ணான் உலகு" என மறுத்தனன் அவன். இக் குறுந்தொகைச் செல்வியோ, துன்பமே இன்பமாதலுங் கூடுமென்பதை உணர்ந்தாள். இதனை முரணென அறிவு கருதுமேனும், உணர்வின் இரகசியத்தினுள் இதனினும் அரிய முரணெல்லாம் அமைதிபெறக் காணலாம். இத்துணைத் துன்பம் இல்லாமையால், "இதனினும் இனிதோ புத்தேள் நாடு" என வினவினள் இப்பெண்ணின் பெருந்தக்காள். வாழி இவள் வாய்மை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0

குழந்தைகளுக்கு

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0

"சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு
பண்டிட் ஸோல் ஏஜண்ட்: சுன்லாஸ், மதுரை

தைலங்கள்:

சந்தனாதி 6 அவுன்ஸ்	ரூ. 1-0-0
அமிர்தாமலக "	0-12-0
பிருங்காமலக "	0-12-0

ஸ்திரீகளுக்கு

ஸுதக டானிக்	2-0-0
கர்ப்பாசய டானிக்	2-0-0
ப்ரஸவ லேகியம்	1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
சியவனப்ராசா பிருங்காமலக தைலம் கோரோஜனா மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

சியவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிறுமணக்கு எண்ணை காஸ்ட்ராலகஸ்
ஜவரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

திருவிளையாடற் சரண மஞ்சரி:—பள்ளத்தூர், ஸ்ரீமான் அ. மு. ப. அ. மு. முருகப்ப செட்டியாரவர்கள், நாடோறும் பூசை செய்வோர்க்கு உதவும்படி சிவபிரான் திருவிளையாடல்கள் அறுபத்து நான்கினையும் அடக்கி அகவற்பாவில் பாடியுள்ள சிறு நூல் எம்முடைய பார்வைக்கு வந்திருக்கின்றது. தமிழின் இனிமையும் பக்திச் சுவையும் வாய்ந்த இதனை நாம் பாராட்டுகின்றோம்.

126-வயதுக் கிழவர்:—தென் திருவாங்கூரில் கோட்டையத்தை அடுத்த புரவன் தருத்தி யென்ற ஊரில் 125 வயது சென்ற ஆதித்திராவிடர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு அத்தனை வயதுசென்றும் அவர் உடல்நலத்துடன் இருப்பதுடன் நிலத்தில் வேலைசெய்து வருகின்றார். அவருக்கு மூன்றாவது முறையாகப் புதியபற்கள் முளைத்திருக்கின்றனவாம்.

45 வருஷம் உறங்காதவர்:—தென் ஆப்பிரிக்கா போர்ட் எலிசபத்தில் விநோதசாமான் வியாபாரியான 53 வயதுசென்ற வில்லியம் கால்சன் என்பவர் சென்ற 45 வருஷமாகச் சிறிதும் உறங்கவில்லையாம். 28 வயதில் அவருக்குத் தூக்கம் நின்றுவிட்டதாம். இவரைவிடக் குறைந்தகாலம் உறங்காத சிலரும் உலகத்தில் இருக்கிறார்கள்.

கடவுளால் கண் பெற்றாள். அமெரிக்கா நியூ ஜெர்சியை அடுத்த பட்லர் என்ற ஊரில் ஒரு கிழவிக்குப் பதினைந்து வருஷங்களுக்குமுன், எழுபது வயதாயிருக்கும் பொழுது கண் குருடாய் விட்டது. அவள் அதுமுதல் தினந்தோறும் அந்தோனியார் கோயிலுக்குச் சென்று ஆண்டவனைத் தொழுது வந்தாள். நாள்தோறும் அவளுக்கு நம்பிக்கை வளர்ந்து வந்தது. பின் சிறிதுகாலங்கழித்து அவள் தலையில் நோவு ஏற்பட்டது. பின் நாளடைவில் கண்பார்வை முழுமையும் ஏற்பட்டுவிட்டது. அவள் தனது பேரப்பிள்ளைகளைக் கண்ணாற் காணும் பாக்கியம் பெற்றாள். நம்பிக்கையால் நாட்டம் பெற்றேன் என்று மேரி க்ளேசன் என்ற அந்த மாது கூறுகிறாள்.

அற்புதப் பார்வை:—லண்டனில் மிஸ். ஹில்டா அட்லி என்ற 26 வயது சென்ற ஒரு பெண் மக்களின் வெளிப்புறத்தை மட்டுமன்றி உட்புறத்தையும் பார்க்கக்கூடிய அற்புதப் பார்வை யுடையவளாக இருக்கிறாள். அவள், மக்கள் உடம்புக்குள் இருக்கும் நரம்பு சதை எலும்பு முதலியவற்றையும் பார்க்கிறாளாம். ஒருவருடன் அவள் பேசினால் அவர்கள் உடம்புக்குள் இருப்பதெல்லாம் அவள் கண்களுக்கு எக்ஸ்ரே கண்ணாடிபோலத் தெரிகிறதாம். ஆனால் உயிரில்லாத பொருள்களில் அவ்வாறு பார்க்க முடியவில்லையாம். உயிருள்ள மனிதர், விலங்குகள், முதலியவற்றையே அவள் அவ்வாறு பார்க்கிறாளாம்.

—லோகோபகாரி

அமிர்தசாகரம்

தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு	ரூ. 1 0 0
5 டப்பிகள்	ரூ. 4 0 0

இனும்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

ஏஷ்யாடிக் கவர்ன்மெண்டு செக்யூரட்டி
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி,
லிமிடெட்,
(மைசூரில் இணைக்கப்பட்டது.)

பிரதான இந்திய சமஸ்தானத்தைச் சேர்ந்த இம் முற்போக்கு வாய்ந்த லைப் ஆபீஸ் இணையற்ற மிகவும் குறைந்த செலவில் நவீன அஷ்யூரன்ஸ் திட்டங்கள் யாவற்றையும் அளிக்கின்றது. நோய், விபத்து காலங்களில் சக்தியில்லாமலிருந்தால் அப்போது லாபங்களுடனும், தானாகவே பறிமுதல் செய்யப்பட முடியாத வசதியுடனும் கூடியது. பாலிஸிகள் பறிமுதல் செய்யப்படாமலும், ஆக்ஷேபிக்க முடியாமலும் உள்ளவை. பாலிஸி கெடுவடையும் காலத்தில் சாசுவதமான ஆதரவு கொடுப்பது. ஸ்திரீகளது ஆயுள்களுக்கும் இன்ஷியூர் செய்யப்படும்.

இன்றே விவரங்களுக்கு எழுதுக:—

V. ரங்கஸாமி பி. ஏ., பி. எல்.,
ஜெனரல் செக்ரிடரி & மானேஜர்,
பெங்களூர் ஸிடி.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)